# தமிழர் பொருண்மியம்

## வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 09

12.03.2023



# தங்க நகை விற்பனையில் தீடீர் அதிகரிகப்பபு

டொலரின் சடுதியான வீழ்ச்சி 02

புலம்பெயர் உறவுகள் மூலம் இலங்கையை நிமிர்த்தலாம் 06

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



பி.பார்த்தீபன்

# டொலரின் சடுதியான வீழ்ச்சி தற்காலிகமா? நிரந்தரமானதா?

இலங்கையின் பொருளாதாரத்தில் அதிரடியான சில மாற்றங்களை கடந்த ஒரு வார காலத்தில் காணக் கூடியதாக இருந்துள்ளது. இலங்கை ரூபாவுக்கு எதிரான அமெரிக்க டொலரின் பெறுமதி வேகமாக சரிந்துவருகின்றது. டொலர் சரிய, ஏனைய நாடுகளின் நாணயங்களும் வீழ்ச்சியடைகின்றன. இதன் விளைவாகத் தங்கத்தின் விலையும் பெருமளவுக்குக் குறைந்திருக்கின்றது. இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகளும் சடுதியாகக் குறைந்திருக்கின்றன.

அண்மைக்காலத்தில் தாங்க முடியாத பொருளாதார சுமையைச் சுமந்து கொண்டிருந்த மக்களுக்கு இது சற்று ஆறுதலைக் கொடுத்தாலும் இதன் பின்னணியில் இரண்டு கேள்விகள் உள்ளன.

முதலாவது - இலங்கை ரூபா இவ்வாறு திடீரெனப் பலமடைந்தமைக்கு காரணம் என்ன?

இரண்டாவது - இந்த நிலைமை நிரந்தரமானதா? இதில் மாற்றம் ஏற்படுமா?

இவற்றுக்கான பதிலைப் பார்ப்பதற்கு முன்னர் கடந்த இரண்டு வருட காலத்தில் டொலரின் பெறுமதி எவ்வாறிருந்துள்ளது என்பதையிட்டு சுருக்கமாக ஆராய்வோம்.

### 177 இலிருந்து 410 வரை

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி பீடம் ஏறும் போது, அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 177 ரூபாவில் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி, அதாவது சரியாக ஒரு வருடத்திற்கு முன்பாக அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 201 ரூபா 89 சதமாக காணப்பட்டது.

இந்த நிலையில், இலங்கை ரூபாவின் பெறுமதி 2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு பின்னரான காலத்தில் பாரிய சரிவை சந்தித்திருந்தது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 202 ரூபா 09 சதமாக காணப்பட, அடுத்த நாள் 229 ரூபா 50 சதம் வரை சடுதியாக வலுவிழந்தது.

2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையான காலத்திற்குள் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 364 ரூபா 76 சதமாக பதிவாகியிருந்ததாக மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கை மத்திய வங்கியின் அறிவிப்பின் பிரகாரம், 364 ரூபா 76 சதமாக நிர்ணயிக்கப்பட்ட அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி, தனியார் முகவர் நிலையங்கள் மற்றும் கருப்பு சந்தையின் ஊடாக சுமார் 410 ரூபா வரை சென்றிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் உல்லாசப் பயணிகள் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சி, கொரோனாப் பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு, ஏற்றுமதிகள் அதிகரிக்காத நிலை, இறக்குமதிகள் அதிகரிப்பு என்பனதான் டொலரின் கையிருப்பு குறைவடைந்து அதன் பெறுமதியை 401 ரூபா வரையில் கொண்டு சென்றிருந்தது.

### மாற்றத்துக்கு காரணம்?

இப்போது சந்தை நிலவரப்படி டொலரின் பெறுமதி 305 வரையில் வெள்ளிக்கிழமை குறைவடைந்திருந்தது. அடுத்த வாரத்தில் இது மேலும் குறைவடையலாம். இதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய முற்பட்டபோது பல விடயங்கள் பொருளாதார ஆய்வாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டன.

இலங்கை வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை குறுகிய காலத்திற்குச் செலுத்தாதிருப்பதற்கு முடிவெடுத்திருக்கின்றது. அதாவது, வங்குரோத்து நிலையை அறிவித்திருப்பதால், டொலர் வெளியே செல்வது குறைவடைந்திருக்கின்றது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்தமை, இறக்குமதிகள் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்றுமதி வருமானம் சற்று அதிகரித்துள்ளமை, வெளிநாட்டுப் பணியாளர்களின் வருமானத்தின் வருகை அதிகரித்துள்ளமை, உலக வங்கியிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற உதவித்திட்டம் ஆகியவற்றினால் கிடைக்கப் பெற்ற டொலரினால் நாட்டின் கையிருப்பு அதிகரித்திருக்கின்றது. இதனைவிட அத்தியாவசிய பொருள் இறக்குமதிக்கு உதவி வழங்கும் வகையில், 400 மில்லியன் டொலரை வழங்க வொஷிங்டனிலுள்ள உலக வங்கியின் முதலீட்டு பிரிவான சர்வதேச நிதிக் கூட்டுதாபனம் முன்வந்திருக்கின்றது.

இவற்றைவிட, சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது கட்ட நிதி உதவியும் இம்மாத இறுதியில் கிடைக்கலாம் என்பதும் டொலரின் பெறுமதி ஒரு வார காலத்தில் சடுதியாக வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்துள்ளது. அதாவது நாணய நிதிய கடன், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் வழங்கும் 400 மில்லியன் டொலர் என்பன நாட்டுக்கு வரும் போது, டொலரின் பெறுமதி குறையும் என்னும் எதிர்பார்ப்பில், டொலரை பதுக்கி வைத்திருந்த பலரும் அதனை அவசரம் அவசரமாக வெளியே விட்டிருக்கலாம்.

### இந்த நிலை தொடருமா?

இவ்வாறு கடந்த ஒரு வார காலத்தில் பெறுமதி குறைந்த டொலர் எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கும் என்ற கேள்வியும் அனைவரிடமும் எழுகின்றது.

டொலரின் பெறுமதி குறைந்து ரூபா பலமடைந்திருப்பது போல காட்டப்படுவதற்கு இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக இருக்கவில்லை. அதிகளவுக்கு டொலர் மேலே சொன்னவாறு பல்வேறு வழிகளால் நாட்டுக்குள் வந்திருப்பதுதான் அதற்குக் காரணம்.

இதனைவிட மற்றொரு காரணமும் இதற்குச் சொல்லப்படலாம். கடந்த காலங்களில் பெருந்தொகையான ரூபாக்களை மத்திய வங்கி அச்சிட்டு வெளியிட்டது. ஆனால், ஐ.எம்.எப்.பின் நிபந்தனை காரணமாக கடந்த ஒரு இரு மாதங்களாக பணம் அச்சிடப்படவில்லை. அது ரூபாவுக்கான கேள்வியை அதிகரித்து அதன் பெறுமதியைக் கூட்டியுள்ளது. டொலரின் வீழ்ச்சிக்கு அதுவும் ஒரு காரணம்.



- பவித்ரா -

> அதிகரித்துள்ள தங்க நகை விற்பனை மக்களிடம் பணம் இருப்பதைக் குறிக்காது. நெருக்கடியான சூழ் நிலைகளில் தங்கத்தின் மதிப்பை அவர்கள் புரிந்துகொண்டதால்தான் இப்போது முடிந்தளவுக்கு வாங்க முற்படு கின்றார்கள்.

# சரிவடைந்த தங்க நகை விலை! விற்பனையில் திடீர் அதிகரிப்பு

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி அதிகரிப்பின் காரணமாக கடந்த வாரம் தங்கத்தின் விலை மேலும் குறைந்துள்ளதாக கொழும்பு கடற்கரை வீதியில் உள்ள தங்க நகை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால், அதிகளவானவர்கள் தங்க நகைகளை வாங்குவதற்கு முண்டியடிப்பதைக் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் காண முடிகின்றது.

இது தொடர்பாக நகை வியா பாரிகள் கூறுகையில், 24 காரட் தங்கம் சவரன் கடந்த வாரம் 185,000 ரூபாவாக இருந்தது. இப்போது அது 40,000 ரூபா குறைவடைந்திருக்கின்றது. மற்றும் 22 காரட் சவரன் கடந்த வாரம் 172,000 ரூபாவாக இருந்தது. இது இப்போது 38,000 ரூபாவாக குறைந்திருக்கின்றது.

தற்போது 24 காரட் சவரன் 145,000 ரூபாவாகவும், 22 காரட் சவரன் 134,000 ரூபாவாகவும் உள்ளது என்று நகை வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஏறக்குறைய மூன்று வருட இடைவெளிக்குப் பிறகு கொழும்பு நகைக் கடைகளில் குறைக்கப்பட்ட விலைகளில் விற்பனைகள் அதிகரித்துள்ளன என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

“பல வருடங்களுக்குப் பிறகு, மீண்டும் நகைகளை வாங்க வாடிக்கையாளர்கள் மத்தியில் ஆர்வத்தை நாங்கள் காண முடிகின்றது” என்று விற்பனையாளர் ஒருவர் தெரிவித்தார்.

விலையில் இவ்வளவு பெரிய சரிவை தாங்கள் எதிர்பார்க்கவில்லை என்று மீண்டும் வலியுறுத்திய அவர்கள், விலைகள் குறைவடைந்தமையால் இந்த வாரம் தங்களுக்கு நல்ல விற்பனை வாய்ப்புக் கிடைத்துள்ளது என அவர்கள் கூறினார்.

“மக்களிடம் பணம் இருக்கிறது என்று அர்த்தமல்ல, பொருளாதார நெருக்கடியில் நகைகளை வைத்திருப்பதன் மதிப்பை அவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். எங்கள் வாடிக்கையாளர்களிடம் பேசுவதன் மூலம், புதிய நகைகளை எதிர்கால முதலீடுகளுக்காக வாங்குவதை நாங்கள் கவனித்தோம், ”என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் பெரும்பாலான வாடிக்கையாளர்கள் எளிய தங்கச் சங்கிலிகளை வாங்கியுள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடந்த இரண்டு வருடங்களாக பல வாடிக்கையாளர்கள் தங்களுடைய பழைய தங்கத்தை விற்பனை செய்வதை தாங்கள் பார்த்ததாக மற்றொரு வர்த்தகர் கூறினார்.

“இப்போது மக்கள் மீண்டும் வாங்க ஆர்வமாக உள்ளனர், ஏனெனில் இது கடினமான பொரு ளாதார சூழ்நிலைகளில் கைக்கு வரும் மற்றும் அடகு வைத்த பிறகு சேமிக்க முடி யாத சில பொருட்களை மாற்றிவிடும்” என்று அவர் குறிப்பிட்டார்.

திருமணம், சாமத்திய சடங்கு, குழந்தைகளுக்கு காது குத்தும் சடங்கு போன்ற தேவைகள் உள்ளவர்கள் தங்க நகைகளை வாங்கிச் சென்றதாக மற்றொரு விற்பனையாளர் விளக்கமளித்தார்.

“முன்பு, மக்கள் முதலீடாகத் தங்கத்தை வாங்கினார்கள். ஆனால் பொருளாதார நெருக்கடியால் அந்தப் பழக்கம் நின்றுபோனதைக் கண்டோம். ஒரு சில வாடிக்கையாளர்கள் மட்டுமே அவற்றை வாங்கியுள்ளனர்” என்றும் அவர் விளக்கினார்.

# டொலரின் சடுதியான வீழ்ச்சி ............

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா வலுவடைந்துள்ள இந்த நிலை தொடருமா? என கொழும்பு பல்கலைக் கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.கணேசமூர்த்தியிடம் கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார் –

“இதுபோலியாக உருவாக்கப்பட்ட ஒரு நிலைமை. இதனை ஒரு சாதகமான நிலைமையாக பார்க்க முடியாது. இதுவொரு தற்காலிகமான நிலைமை. இலங்கையின் நிலைமைகள் வழமையான நிலைக்கு திரும்புகின்ற போது, சில மாற்றங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. உலக வங்கியினால் வழங்கப்பட்ட இந்த உதவியானது, ஒரு முறை மாத்திரமே வழங்கப்படும். இந்த பணம் பயன்படுத்தப்பட்டதன் பின்னர், மீண்டும் பழைய நிலைக்கு செல்வதற்கான சாத்தியம் உள்ளது.” ஆக தற்போதைய இந்த நிலை நிரந்த மானதாக இருக்கும் எனக் கருத முடியாது.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777 276 949

## அரசின் திட்டம் என்ன?

இலங்கையின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் முக்கியமான பல திருப்பங்களைக் கடந்த வாரத்தில் காண முடிந்தது. நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இம்மாத இறுதியில் கடன்பொறியிலிருந்து இலங்கையை பிணை எடுப்பதற்கான முதலாவது கட்ட உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை நாடாளுமன்றத்தில் அறிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பணி முடிவடைந்துவிட்டது என்றும் கூறியிருக்கின்றார்.

ஐ.எம்.எப்.பின் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதென்பது தனக்குக் கிடைத்த ஓர் அரசியல் வெற்றியாகக் காட்டிக் கொள்வதற்கு ரணில் முற்பட்டிருப்பதை அவரது இந்த உரை வெளிப்படுத்தியது. கடந்த வருடத்தில் மக்கள் எதிர்கொண்ட பல நெருக்கடிகள் தீர்க்கப்பட்டுவிட்டன என்பது உண்மைதான். ஐ.எம்.எப். உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் நிலையில், டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்திருப்பதையும் கவனிக்க முடிகின்றது. இதன் மூலமாக இறக்குமதி செய்யப்படும் அத்தியவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகளும் குறைவடையும்.

மக்களுடைய பொருளாதார நெருக்கடிகள் குறைவடைந்திருப்பது போன்ற ஒரு தோற்றத்தை இது ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால், இது நிரந்தரமானதா? என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகவே இருக்கின்றது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று – ஐ.எம்.எப். முன்வைத்திருக்கும் நிபந்தனைகளை ஒவ்வான்றாக நிறைவேற்றும் போது பொருளாதார நெருக்கீடுகள் அதிகரிக்கும். வரி அதிகரிப்பு, மின்சார கட்டண அதிகரிப்பு என்பன ஐ.எப்.எம். முன்வைத்த நிபந்தனைகளில் முக்கியமானவை. இதன் தொடர்ச்சியாக மேலும் சில “அதிகரிப்புக்கள்” வரலாம்.

இரண்டாவது – அரசாங்கம் நிலைமைகளைச் சமாளித்துக்கொண்டு செல்வதற்கு முற்படுகின்றதே தவிர குறுகியகால நீண்டகாலத் திட்டங்கள் எதனையும் செயற்படுத்தவில்லை. அதற்கான திட்டமிடல்களும் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை.

உதாரணமாகச் சொல்வதானால், புலம்பெயர்ந்தவர்களை முதலீடு செய்யுமாறு அரசாங்கம் ஊடக அறிக்கைகள் மூலமாக அழைக்கின்றதே தவிர, அதற்கான ஆக்கபூர்வமான திட்டம் எதனையும் தயாரிக்கவில்லை. அது தொடர்பில் புலம்பெயர்ந்த முதலீட்டாளர்களுடன் பேச்சுக்களையும் நடத்தவில்லை. அரசியல் ரீதியான காரணங்கள் இதன் பின்னணியில் இருக்கலாம்.

ஐ.எம்.எப். கடனுதவியால் மட்டும் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும் என்று இருப்பது மீண்டும் கடன்பொறியில் சிக்குவதற்கே வழிவகுக்கும். உலகில் இதற்கு பல உதாரணங்கள் உள்ளன. அரசியல் நோக்கங்களுக்கு அப்பால், பொருளாதார வளர்ச்சியை மட்டும் இலக்காகக்கொண்டு செயற்படுவதுதான் இன்றைய தேவை. அதற்கான திட்டங்களையே அரசு அறிவிக்க வேண்டும்!

# அன்புள்ள ஆசிரியருக்கு...



## பெண் தலைமைத்துவ நிறுவனங்கள் .....

கிளிநொச்சியிலுள்ள எபினேசர் தும்புத் தொழிற்சாலையை நடத்தும் வசந்தகுமாரி என்ற பெண்மணியின் நேர்காணலை வாசித்தேன். பலருக்கும் ஒரு வழிகாட்டியாக அது அமைந்திருந்தது.

தமிழர் பொருண்மியம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒவ்வொரு வாரமும் போரின் பின்னர் உருவாகி சவால்களை எதிர்கொண்டு வெற்றிகரமாகச் செயற்படும் நிறுவனங்கள் குறித்த கட்டுரைகளை வெளியிடுகின்றீர்கள். இவற்றில் பெரும்பாலானவை இளம் பெண்களால் நடத்தப்படுவதையும் உங்கள் இதழ்களை வாசிக்கும்போது அவதானிக்க முடிகின்றது.

இந்த பெண்களை ஊக்குவிக்கும் வகையில் நீங்கள் அவர்களுடைய நேர்காணல்களைத் தொடர்ந்து வெளியிடுவது பாராட்டத்தக்கது. இதனைத் தொடருங்கள்.

**எம்.நந்தினி, சுதந்திரபுரம், முல்லைத்தீவு**

## உணவே மருந்து

கடந்த வாரம் தமிழர் பொருண்மியம் வெளியிட்ட அனைத்து விடயங்களும் சிறப்பாக இருந்தன. குறிப்பாக அட்டைப்படம் அருமையாக இருந்தது. அதுபோல உணவே மருந்து என்ற தமிழ்க்கவி அம்மாவின் கட்டுரையும் சிறப்பு. பேராசிரியர் விஜயச்சந்திரன் வழங்கியிருந்த நேர்காணல் இலங்கை எதிர்கொண்டிருக்கும் பிரச்சினையை வெளிப்படையாகப் படம்பிடித்துக்காட்டியது. வாழைப்பழம் குறித்த பேராசிரியர் அ.சி.கந்தராஜாவின் கட்டுரையும் பல புதிய தகவல்களை எமக்கு தந்திருந்தது. தொடர்ந்தும் இது போன்ற ஆக்கங்களுடன் தமிழர் பொருண்மியம் வார இதழை எதிர்பார்க்கிறோம்.

**எஸ்.மல்லிகா, வட்டுக்கோட்டை.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட
* ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட

சந்தாத் தொகையை **Green media House Pvt Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்கு செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

பெயர் - ----------------------------------------------------


முகவரி - ----------------------------------------------------

தொலைபேசி இலக்கம் - ------------------------------------

சந்தாக் காலம் - ------------------------------------------------

செலுத்திய தொகை - --------------------------------------------

செலுத்திய திகதி - ----------------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 151,250.00ரூபா.**

**24 கரட் தங்கம் 164,900.00 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி** - ஒரு தொழில்முனைவோராவதற்குப் பணம் மட்டும் இருந்தால் போதுமா?

**எம்.லோகேஸ்வரி,**
**மன்னார்**

**பதில் -** நிச்சயமாக இல்லை. அவ்வாறான ஒரு கருத்து பொதுவாகச் சொல்லப்பட்டாலும் கூட, அது தவறானது. உலகின் முன்னணி தொழில் நிறுவனங்கள் பல முதலீடுகள் இல்லாமல், இளம் வயதினரால் ஆரம்பிக்கப்பட்டன என்பது கவனிக்கத்தக்கது.

இன்று உலகம் முழுவதிலும் பேசப்படுகின்ற அப்பிள், மைக்ரோ சொஃப்ட் நிறுவனங்கள் ஒரு சதம் கூட முதலீடு இல்லாமல்தான் ஆரம்பிக்கப்பட்டவை.

உலகத்தை ஆளும் நிறுவனங்களாக இருக்கின்ற பேஃஸ் புக் உட்படப் பல நிறுவனங்கள் இவ்வாறு முதலீடு இல்லாமல் ஆரம்பிக்கப்பட்டவைதான். இன்று எம்மத்தியிலேயே எம்மால் பார்க்கக் கூடியதாக இருக்கின்ற யு - ரியுப் சனல்கள் பல வெறுமனே ஒரு தின்பேசியை மட்டும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டவைதான். அதில் பலர் இன்று இலட்சங்களில் உழைக்கின்றார்கள்.

அப்படியானால் ஒரு தொழிலை ஆரம்பிக்க என்ன வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்.

சந்தையில் யாது தேவையாகவுள்ளதென்பதையும், மக்களுக்குத் தேவையானவற்றில் அங்கு எதனைக் காண முடியவில்லை என்பதையும் அடையாளம் காண்பதோடு சமூகத்தின் தேவையையும் அடையாளங் காண்பதற்கான திட்டமொன்று முதலில் உருவாக வேண்டும்.

ஒரு தொழில்முனைவோரின் முதலாவது பணிகளாக இவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைச் சரியாக அடையாளம் கண்டால், அதனை எவ்வாறு எம்மால் வழங்க முடியும் என்பதற்கான ஒரு திட்டம் கிடைக்கும்.

இன்று நாடு பொருளாதார நெருக்கடி ஒன்றுக்குள் சிக்குண்டுள்ளது. இது குறித்து தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தக் கூடிய அதிலிருந்து மீள்வதற்கு வழிகாட்டக்கூடிய ஊடகம் ஒன்றின் தேவை சமூகத்தில் காணப்படட்டது. அதிலிருந்து கிடைத்த திட்டம்தான் தமிழர் பொருணமியம் வெளி




வருவதற்குக் காரணமாக இருந்தது.

முதலில் ஒரு வெற்றிடத்தை அல்லது தேவையை அடையாளம் காண்பது. அதற்குத் தேவையான ஒரு பொருளை அல்லது சேவையை தயாரிக்க வேண்டும். அதனை சந்தையில் இறக்கி மக்களுடைய பிரதிபலிப்பை சரியாக மதிப்பிட வேண்டும். அந்த மதிப்பீடுகளில் கிடைத்த தரவுகளை ஆய்வு செய்து தவறுகளை அடையாளம் கண்டு திருத்திக்கொள்ள வேண்டும். அதன்பின்னர் மீண்டும் சந்தைப்படுத்தி பிரதிபலிப்புக்களை மீண்டும் மதிப்பிட வேண்டும்.

அத்துடன் உங்களுடைய பங்காளி யார் என்பதைத் தெரிவு செய்வதும் உங்கள் தொழில்முயற்சிக்கு முக்கியம்.

இவை தொடர்பாக நிறைய விஷயங்களைச் சொல்லிக்கொண்டு போலாம். ஆனால், இடநெருக்கடி கருதி சுருக்கமாக முடித்துக்கொள்கின்றோம்.

**உங்களுடைய கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி**
**tamilseconomy@gmail.com**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 220/= |
| உருளைக்கிழங்கு | - 120/= |
| பச்சைமிளகாய் | - 320/= |
| தக்காளி | - 80/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 160/= |
| கோவா | - 100/= |
| கரட் | - 100/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 180/= |
| வாழைக்காய் | - 150/= |
| சின்ன வெங்காயம் | - 280/= |
| பெரிய வெங்காயம் | - 140/= |
| பாகற்காய் | - 400/= |
| வெண்டிக்காய் | - 200/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 200/= |
| லீக்ஸ் | - 250/= |
| பீற்றூட் | - 200/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 1600/= |
| போஞ்சி | - 200/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 202/= |
| கனடா டொலர் - | 222/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 324/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர்டொலர் - | 226/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 464/= |
| சுவிஸ் பிராங் - | 326/= |
| அமெரிக்க டொலர் - | 307/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 216/= |
| கனடா டொலர் - | 238/= |
| சீன யுவான் - | 47/= |
| யுரோ - | 344/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர் டொலர் | 241/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 487/= |
| சுவிஸ் பிராங் - | 349/= |
| அமெரிக்க டொலர் - | 325/= |




அதிகூடிய வரிச்சுமை, மின்சாரம் மற்றும் குடிநீர் போன்றவற்றின் கட்டணங்கள் ஏற்றக்கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது. இது சாதாரண மக்கள் மத்தியில் பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் அரசியல் மற்றும் சமூக குழப்பங்கள் ஏற்படுவதற்கான நிலைமை ஏற்படும்.

# புலம்பெயர் உறவுகள் மூலம் இலங்கையை நிமிர்த்தலாம்!

மூன்று மில்லியனை தாண்டியுள்ள இலங்கை புலம்பெயர் உறவுகள் (diaspora) எமது இலங்கையின் மிகப்பாரிய சொத்து என்பதனை இலங்கையும் ஏன் எமது புலம்பெயர் உறவுகள் கூட உணரவில்லை என்பதே உண்மையாகும். இன்று இலங்கை மீளமுடியாத கடன் சுமையினை தாங்கியவாறு பொருளாதாரச் சிக்கலுக்குள் தடுமாறி விழுந்துள்ளதை நாம் எல்லோரும் அறிவோம்.

கடந்த ஆண்டு (2022) ஏப்பிரல் மாதம் எமது நாடு தான் பெற்ற external debit இனைச் செலுத்த முடியாமல் தன்னை முழுமையாக வலுவிழந்த **(default)** நாடாக அறிவித்தது. அதனை தொடர்ந்து இன்று நாம் பல்வேறு வகையான பொருளாதார பிரச்சனைகளைக்கு முகம்கொடுத்து வருகின்றோம்.

இந்த அடிப்படையில் எமக்கு முன்னால் இருக்கும் இந்த வெளிவாரி கடன்கள் முக்கியமாக மூன்று வகையில் பெறப்பட்டவை ஆகும். இந்த external debits மொத்த பெறுமானம் September 2022 தரவுகளுக்கு அமைவாக 35 Billion USD ஆக உள்ளது. இதில் வர்த்தக கடன் அதாவது ISB போன்ற சர்வதேசப் பிணைமுறி மூலம் பெறப்பட்ட தொகை 14.7 Billion USD ஆக உள்ளது. அது போல் World bank மற்றும் Asia Development Bank போன்ற நிறுவனங்களில் இருந்து பெற்ற multilateral கடன் தொகை 9.5 Billion USD ஆக உள்ளது.

அதேவேளை சீனா இந்தியா ஜப்பான் அமெரிக்கா போன்ற பத்துக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து பெறப்பட்ட bilateral கடன் தொகை 10.8 Billion USD ஆக உள்ளது. இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் Parris Club என்று சொல்லப்படுகின்ற ஒழுங்கமைக்கப்பட்ட கடன் வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளில் இருந்து பெறப்பட்ட கடன் தொகை இந்த மொத்த bilateral கடனில் 4.1 billion USD மட்டுமே. ஆனால் மிகுதிக் கடன் தொகை அண்ணளவாக 6.7 Billion USD இந்த கூட்டமைப்பில் இடம் பெறாத சீனா, இந்தியா மற்றும் பாக்கிஸ்தான் போன்ற நாடுகளிடம் பெறப்பட்டதாகும்.

இன்று நாடு முழுமையாக default ஆகியுள்ள நிலையில் உடனடியாக செலுத்த வேண்டிய அனைத்து கடன்களையும் முழுமையாக செலுத்தினால் மாத்திரமே மீண்டும் புதிய கடன்களைப் பெற்று முன்னோக்கி நகர முடியும். அல்லது இந்த கடன்வழங்கிய நாடுகள் தங்கள் கடன்களை மீளச் செலுத்துவதற்கான கால எல்லைகளை மீள ஒழுங்கமைத்து தரவேண்டும். ஆனால் இங்கு இருக்கும் பிரச்சினை என்னவென்றால் இலங்கைக்கு பாரிய கடன் வழங்கிய நாடுகள் பல இந்த கடன்வழங்கும் நாடுகளுக்கான Parris club என்ற கூட்டமைப்பில் இல்லாத காரணத்தால் அனைவரையும் ஒரு சேரக் கதைத்து ஒரு பொது முடிவுக்கு வரமுடியவில்லை. இது இக் கடன் பிரச்சினையில் எமக்கு மிகவும் பின்தங்கிய ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளது.

## IMF கடனும் இலங்கையும்

1965 ஜீன் முதல் 16 தடவைகள் இது வரையும் இலங்கை IMF இடம் இருந்து கடன்களைப் பெற்றுள்ளது. இந்த முறை எமது நாடு 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பிறகு சற்று வித்தியாசமாக முதன்முறையாக தன்னை பாரதூராமாக ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவில் இருந்து தன்னை பிணை எடுக்கும் (bailout) உதவியினை IMF இடம் எதிர்பார்த்து உள்ளது. கடந்த 2022 ஆண்டில் செலுத்த வேண்டிய external debits தொகையான 7 billion USD கூட செலுத்த முடியாது உள்ள நாம் இன்று 2.9 Billion USD அளவான தொகையே IMF எமக்கு 48 மாத கால எல்லைக்குள் மட்டுப்படுத்தியவாறு கொடுபதற்கான staff level அனுமதியை வழங்கியுள்ளது. IMF தன்னுடைய கடன் தொகையை வழங்க வேண்டும் என்றால் இலங்கையின் bilateral கடன்களில் அதிக பங்களிப்பை வைத்திருக்கும் சீனாவும் இந்தியாவும் அவர்கள் இலங்கைக்கு வழங்கிய கடன்களின் மீள் செலுத்த வேண்டிய கால எல்லையை மாற்றி அமைக்க வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளது.

இந்த 2.9 billion IMF இடம் பெறுவதற்காக இலங்கையில் மொத்த அரசியல், நிர்வாக மற்றும் பொருளாதார கட்டமைப்பில் கடுமையான மாற்றங்களை கொண்டு வர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதானால் அதிகூடிய வரிச்சுமை, மின்சாரம் மற்றும் குடிநீர் போன்றவற்றின் கட்டணங்கள் ஏற்றக்கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்துள்ள நிலமை ஏற்பட்டுள்ளது.

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வரி விளம்பரம் classified advertisement




### வேலைவாய்ப்பு

உயர்தரத்தில் உயிரியல் இணைந்த கணித்துறையில் கற்று 3 பாடங்களிலும் தேர்ச்சி அடைந்து ( 3s+ ) எடுத்தவர்களுக் காக ஆனையிறவில் உப்பளம் ஒன்றில் ஆய்வுகூட பரிசோதகர் வேலைவாய்ப்பு. **Alex Salt Factory 772279984**

---

கிளி கரைச்சி தெற்கு பல நோக்கு கூட் டுறவு சங்கத்தின் கூட்டெரு உற்பத்தி நிலை யத்தில் ( செல்வாநகர் ) வேலை வாய்ப்பு கள் உண்டு. **GM - 0777765925**

---

கடைக்கு வேலைக்கு 2பேர் தேவை. பெண்கள். 18-30 வயதெல்லை. இடம் விசுவமடு. 0775406732

---

தமிழ் தட்டச்சு தெரிந்த பக்க வடிவமைப் பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத் திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந் துள்ள இயற்கை விவசாய பண்ணைக்கு தங்கி நின்று வேலைசெய்யகூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பா ளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்கிவிப்பு கொடுப்பனவுகளும் வழங் கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மை யில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற் பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகத்தில் வியாபாரத் தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத் திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நட வடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய் யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவ னத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும் புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவை யினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க வும். (மின்னஞ்சலின் **subject** இல் **Soft ware and Web Developement** குறிப் பிட்டு அனுப்பவும்)

---

யாழில் இருந்து வெளிவரும் தினசரி பத்திரிகைக்கு ஒன்றிற்கு ஒப்புநோக்குநர் **(Proof Reader)** தேவை. தமிழில் புலமை யும் தெளிவான கண்பார்வையும் உள்ள வர்கள் விண்ணப்பிக்கலாம். பகல் மற்றும் இரவு வேலைகள் உள்ளன. உங்களது விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி - 551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertise ment Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப் படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### தேவை

பன்றிகளுக்கு உணவுக்காக உணவுக் கழிவுகள் தேவைப்படுகின்றன. வட மாகாணத்தில் எங்கேனும் நாங்கள் வந்து எடுத்துக் கொள்வோம்.

தொடர்பு கொள்ள - 0777765847

---

3 மாத மரவள்ளி தடி தேவையாக உள்ளது. இருப்பவர்கள் தொடர்பு கொள் ளவும். 0713428281

### விற்பனைக்கு

---

பன்றி பண்ணை உயிர்வாயு கழிவுநீர் விவசாயத்துக்கு தரப்படும். பவுசர் உண்டு. டிராக்டர் உடன் வரவும். செல்வாநகர் கிளிநொச்சி. 0777765847

---

வவுனியா ஓமந்தையில் நல்ல இன கப்பல் வாழை குட்டி உண்டு தேவை யானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**TP - 0760856763**

---

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




150Kg கௌப்பி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு 0779791027

---

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாக தயாரிக்கப்பட்ட யாழ்ப் பாண சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள் ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன் றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு 0766482303

---

### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

---

A9 வீதியில் இருந்து 1 km தூரத் தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்ப னைக்கு. இயற்கையான சூழலில் உங்க ளின் ஓய்வு காலத்தினை அமைதியாக வும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம்.
தொடர்புகளுக்கு 0779789177

### வீடு வாடகைக்குத் தேவை

திருநெல்வேலி, நல்லூர், கச்சேரி ஆகிய வற்றிற்கு அண்மித்த பகுதிகளில் இரண்டு பேர் (கணவன், மனைவி) தங்குவதற்கு சிறிய வீடு வாடகைக்கு தேவை. தொடர் புகளுக்கு 0758869168

---

யாழ் நகரினை அண்மித்த பகுதிகளில் வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடு அல்லது கட்டடம் வாடகைக்கு தேவை. நீண்டகால வாடகை அல்லது குத்தகை விரும்பத்தக் கது. தொடர்புகளுக்கு 0777277009

---

### வாகனம் வாடகைக்கு

பன்றிகளுக்கு உணவு ஏற்றுவதற்கு பட்டா ஒன்று யாழ்ப்பாணத்தில் டிரைவரு டன் வாடகைக்கு தேவை. மாதம் முழுவதும் வேலை. 777765847


# குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

**கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்**

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/- (USD 550)
பரப்பு 20 இலட்சம் (USD 5,500)

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது சாதாரண மக்கள் மத்தியில் பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் அரசியல் மற்றும் சமூக குழப்பங்கள் ஏற்படுவதற்கான நிலைமை ஏற்படும். அவ்வாறு ஏற்பட்டால் ஐஆகு இன் இந்த கடன் தொகை வழங்கும் செயற்பாடும் முற்றாக நிறுத்தப்படும். ஆனால் அவ்வாறான குழப்பங்கள் ஏற்படு வதை தடுப்பதும் இப்பொழுது உள்ள அர சாங்கத்தினால் முடியுமா? என்பதும் ஒரு கேள்விக்குறியே.

உண்மையில் இலங்கை போன்ற அரசியல் கலாச்சாரம் உள்ள நாடுகளில் IMF போன்ற அமைப்புளூடாக வழங்கப் படும் அரடவடையவநசயட கடன்களை பெறுவதில் பாரிய சிக்கல்கள் உள்ளன. உதாரணத்திற்கு நீங்கள் தெரிந்த ஒருவரி டம் கடனை பெறுவதையும் வங்கி ஒன்றில் இருந்து கடனை பெறுவதையும் எடுத்து நோக்கினால் இந்த வித் தியாசத்தினை இலகுவாக புரிந்துகொள்ள முடியும். தெரிந்த ஒருவரிடம் கடன் கேட்கும் போது உங்களுக் கும் அவருக்கும் உள்ள தான ஓர் உறவின் அடிப் படையில் கடனை இலகு வாக பெற்றுக்கொள்ள முடி யும். ஆனால் அது ஒரு வங் கியில் இருந்து வருவதாக இருந்தால் பல்வேறு ஆவ ணங்கள் மற்றும் பல்வேறு தடைகளை கடந்துவர வேண்டும். அது போல் அதன் உங்களுடன் உற வுடன் இருக்கும் ஒரு நாட்டில் இருந்து டிடையவநசயட கடன் அடிப்படையில் பெற் றுக்கொள்ள இருக்கும் சிரமத்தினைவிட IMF போன்ற institutions இருந்து கடன்பெறு வது மிகவும் கடினமானது.



## இலங்கையின் diaspora இலங்கையும்

என்னைப் பொறுத்தவரையில், இலங் கையின் தற்போதைய அரசியல் மற்றும் சமூக கலாச்சாரத்தினை அடிப்படையாக பார்க்கும் போது எமது நாடு தனது மொத் தமாக இருக்கும் 35 Billion USD external கடன்களை மீள செலுத்தி தன்னை மீண் டும் அனைத்து கடன்கள் வழங்குபவர்கள் மத்தியில் மிடுப்புடன் நிலைநிறுத்த வேண் டும் என்றால் அதற்கு இலகுவானது மீண் டும் ஒரு bilateral கடன் தான். ஆனால் இதனை எந்த நாடு குறைந்த வட்டி வீதத் திலும் மீள செலுத்தும் காலம் சற்று அதிக மாகவும் வழங்க முடியும் என்பது தான் கேள்வியாகின்றது.

இன்று பலர் எமது புலம்பெயர் உறவு கள் மூலம் பணத்தினை திரட்டலாம் அதற் காக வெளிநாட்டில் வசிக்கும் அல்லது தொழில்புரியும் 3 million அளவிலான இலங்கையர்களை பல குழுக்களாக தொடர்புகொண்டு முயிற்சித்துவருகிறார் கள். ஆனால் இந்த ஒரு ஆண்டு காலமாக இந்த முயற்சிக்கு எந்த பலனும் ஏற்பட்ட தாக தெரியவில்லை.

ஏனெனில் எமது கலாச்சார அடிப்படை யில் நாம் ஒரு சேர சேர்ந்து செயற்படுவ தில்லை என்பதனை எமது வரலாற்றில் பல தடவைகள் நாம் உணர்ந்துள்ளோம். நாம் செய்கின்ற ஒவ்வொரு உதவியிலும் எமது பெயர் அல்லது எமது குடும்பத்தின் பெயர் பொறிக்கப்பட வேண்டும் என அற் பமாக விரும்பும் பண்பு அதிகமுள்ள மக் களாக நாம் வாழப்பழகிவிட்டோம். அத னால் ஒருசேர செயற்பட்டு பணத்தினை திரட்டும் ஆர்வம் எம்மத்தியில் மிகக் குறைவு. அதனால் பற்பல சிறு குழுக்க ளாக பிரிந்து பணத்தினை ஒரு சிலர் திரட் டியுள்ளார்கள். ஆனால் இறுதியில் அதுகூட ஒழுங்கான ஒரு முறைமைப்படுத்தலுக்கு உட்படாமல் தோல்வியிலும் பண இழப்பி லுமே முடிந்துவருவதை அவதானிக்க முடிகின்றது.

இதனைவிட எம்மில் பலர், நாம் பணம் சேகரித்து அதனை இலங்கை அரசாங் கத்திடம் வழங்கினால் அதற்கு என்ன உத்தரவாதம் கிடைக்கும் என நம்பிக்கை யீனத்தினை வெளிப்படுத்துகிறார்கள். உலக நாடுகளையே இழுத்தடிக்கும் இந்த இலங்கை அரசாங்கம் எம்மை ஏமாற்று வது மிகவும் இலகு என நம்புகிறார்கள். அதனால், நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த இந்தப் பணத்தினை நமது நாடு என நினைத்து வழங்கி நாம் எல்லாவற்றை யும் இழக்க முடியாது. இதனை விட இலங் கையில் வாழும் எமது உறவுகளுக்கு நாம் தனிப்பட்ட முறையில் உதவி செய் தால் போதும் எனப் பலர் ஒதுங்கிவிட்டார் கள்.

## இலங்கையும் இந்தியாவும் சீனவும்

இலங்கையில் யாருடைய பலம் இருக்க வேண்டும் என்பதில் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் முடிந்த பிறகு சீனாவும் இந் தியாவும் பலப்பரீட்சை செய்துவருகின்றன. சீனாவிடம் இருந்து இலங்கை பெற்றுள்ள Bilateral கடனில் 4.7 billion USD அளவான கடன் தொகை இன்னும் மீள் செலுத்தப்படா மல் நிலுவையில் உள்ளது. இதற்கு அதி கூடிய செலுத்தப்படாத வட்டித்தொகையும் வருடம்தோறும் அதிகரித்துவருகின்றது. இதற்கு அடுத்தபடியாக இந்தியாவின் கடன்தொகையும் காணப்படுகின்றது.

ஒரு நாடு என்ற அடிப்படையில் அதிக கடன் வழங்கிய நாடாக இருக்கும் சீனா தன்னுடைய அதிகூடிய ஆதிக்கத்தினை இலங்கையின் மேல் திணிப்பதற்கு முயற் சிக்கின்றது. இந்துசமூத்திரத்தில் தங்க ளுடைய ஆதிக்கத்தினை நிலைநாட்ட சீனாவுக்கு இலங்கை முக்கி யாமாக காணப்படுகின்றது. அதுவும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் Colombo port city பிரதேசம் சீனாவின் மிக முக்கிய மையமாக காணப் படுகின்றது.

சீனவின் திட்டம் இந்து சமூகத்தில் தனது ஆதிக்கத் தினை செலுத்துவது என்பதை அறிந்துகொண்ட இந்தியா பல்வேறு வகைகளில் இதனை தடுப்பதற்கு முயற்சித்து வரு கின்றது. ஆனால் சீனவின் கடன் வழங்கும் திறனுக்கு முன் இந்தியாவினால் போராட முடிய வில்லை என்பதே உண்மை யாகும். இப்பொழுது இலங்கை யின் கடன் மறுசீரமைப்புக்கு சீனா ஒரு தடையாக இருப்பதாக கருத்துக்கள் காணப்படும் சூழ் நிலையில் சீனாவின் மொத்த கடன் தொகையான 4.7 billion அளவான கடன் தொகையை இந்தியாவினால் அல்லது அமெரிக்கா தலைமையிலான அணியினால் வழங்கிவிட்டு இலங்கையை சீனவின் கடன் பிடியில் இருந்து விடுவிக்க முடியும். ஆனால் இவர்களின் கவலை அவ்வாறு இலங்கை சீனாவின் கடன் பிடியில் இருந்து விடுபட்டாலும் சீனாவின் இருப்பினை இலங்கையில் இருந்து இனி அகற்ற முடி யாது என்பதே ஆகும்.

அதனால் தம் மக்களின் வரிப்பணத் தில் இருந்து சீனாவின் கடனை அடைப்பதற் காக இலங்கைக்கு கடன் வழங்குவதால் எந்த முழுமையான பயனும் தங்கள் நாடுகளுக்குக் கிடைக்காது என்பதனை அவர்கள் உணர்ந்துள்ளார்கள். ஆகவே தான் இந்த நாடுகள் கடன் வழங்கும் விட யத்தில் சற்று பின்னுக்கு உள்ளார்கள். இந்தியாவிற்கோ அல்லது சீனாவிற்கோ

(17ஆம் பக்கம் பார்க்க)



AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA) பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்



# வியாபார சவால்களும் தீர்வுகளும்

இலங்கையில் மற்றும் முழு உலகத்தில் உள்ள நமது உறவுகள் "இனி இலங்கையில் என்ன நடக்கப்போகின்றது? இலங்கையில் இனி வாழ முடியுமா? இத்துடன் இலங்கை முடிந்து விட்டதா?, பழைய நிலைமைக்கு திரும்பி வருமா?," போன்ற பல கசப்பான கேள்விகளை நம் பலரிடம் கேட்டு வருவதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

அவர்கள் இவ்வாறு சந்தேகமாக கேட்பதிலும் பல நியாயங்கள் காணப்படுகின்றன. இவற்றினை சாதாரண ஒரு விடயமாக அலட்சியப்படுத்தி சென்றுவிட முடியாத நிலையில் நாம் தற்போது இலங்கையில் உள்ளோம். இலங்கையில் வாழ்கின்ற மற்றும் இலங்கையில் ஏதோ வகையில் தொடர்பு வைத்திருக்கின்ற ஒவ்வொருவரும் என்ன வகையான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன, நிகழப்போகின்றன மற்றும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் நாம் எவ்வாறு செயல்படுவோம் என்பதை அறிய ஆவலாக இருக்கின்றனர். அந்த வகையில் இலங்கையில் வியாபாரம் செய்கின்றவர்கள் அதாவது தொழில் தருநர் என்ன வகையான சவால்களை எதிர்நோக்க உள்ளார்கள் என்பது பற்றியும் மற்றும் அவ்வாறான சவால்களை எவ்வாறு கையாள முடியும் என்பது பற்றியும் பார்ப்போம்.

### மூலதனம்

அமெரிக்க டொலருக்கு மற்றும் ஏனைய நாட்டினுடைய நாணயத்திற்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சி மற்றும் தொடர் தேர்ச்சியான இறுக்கமான இறக்குமதி கட்டுப்பாடு போன்ற பல காரணங்களால் வியாபாரம் செய்வதற்கு தேவையான பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்காக முன்பு தேவைப்பட்ட மூலதனத்தை காட்டிலும் பல மடங்கு அதிகமாக தற்போது தேவைப்படுகின்றது. அதாவது தற்பொழுது ஒரு வியாபாரத்தை புதிதாக செய்வதற்கு அல்லது செய்து வருகின்ற வியாபாரத்தினை கொண்டு நடாத்த தேவையான மூலதனம் சுமார் 5 மடங்குகளுக்கு மேலதிகமாக அதிகரித்துள்ளது. ஆகவே வியாபாரத்திற்கு மூலதனம் பெற்றுக்கொள்வது பாரிய சவாலாக உருவாகியுள்ளது. உதாரணமாக நகை வியாபாரம் செய்பவர்களை எடுத்துக் கொண்டால் கடந்த 15 வருடத்திற்கு முன்பாக அண்ணளவாக 27,000 ரூபாவாக இருந்த 1 சவரின் தங்கத்தின் விலையானது தற்பொழுது 200,000 ரூபாவரையும் உயர்ந்துள்ளது. ஆகவே சிறு மற்றும் நடுத்தர தங்க வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் தமக்குத் தேவையான தங்கத்தின் இருப்பை தக்கவைத்து வியாபாரம் செய்வதற்கு மிகவும் சிரமப்படுவதை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

### இடப்பற்றாக்குறை

"கொரோனா வைரஸ்" போன்ற கொடிய நோயின் காரணமாக நிறுவனங்கள் தொடர் தேர்ச்சியாக பல மாதங்களாக பூட்டி வைத்தமையால் பலர் வாடகையை செலுத்த முடியாமல் வியாபாரத்தை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ இடைநிறுத்தினர். தற்பொழுது நிலைமை ஓரளவு சுமூகமாக இருந்தவண்ணம் இருந்தாலும், வியாபாரம் செய்வதற்கு தேவையான இடத்தினை உரிய முறையில் பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. அவ்வாறு கிடைக்கின்ற இடங்களும் வியாபாரம் செய்வதற்கு உகந்த நிலையில் இல்லாமையும் மற்றும் அதிக உச்ச வாடகை காரணமாக தகுந்த இடத்தினை பெற்றுக்கொள்ள முடியாத தன்மை நிலவுகின்றது. இதன் காரணமாக வியாபாரத்தை கொண்டு நடத்துவதற்கு தேவையான பொருத்தமான இடத்தினை பெறுவது பெரும் சவாலாக மாறியுள்ளது.

### பொருள் தட்டுப்பாடு

உலகப் பொருளாதார மந்தநிலைமை, இறக்குமதி கட்டுப்பாடு (உதாரணமாக விவசாய உரம்), உள்ளூர் உற்பத்தி பாதிப்பு, உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்கள் கிடைக்காமை போன்ற பல காரணங்களினால், வியாபாரம் செய்வதற்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை உள்ளது. பொருட்களுக்கான சிறந்த கேள்வி (Demand) இருப்பினும் பற்றாக்குறை காரணமாக (Lack of Supply) இந்த அருமையான சந்தர்ப்பத்தினை வியாபாரிகள் பயன்படுத்தமுடியாமல் இருப்பது துர்பாக்கியமே.

### வேலை ஆட்கள் பற்றாக்குறை

"கொரோனா வைரஸ்" போன்ற கொடிய நோயின் காரணமாக ஏற்பட்ட பல்வேறு சுகாதார கெடுபிடிகள், அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவு, பலர் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு செல்கின்ற நிலைமை மற்றும் கல்வி நடவடிக்கைகளில் பாரிய காலதாமதம் போன்ற காரணங்களினால் வியாபாரத்திற்குத் தேவையான வேலை ஆட்களை பெற்றுக் கொள்ள முடியாத தன்மை தற்போது பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. அதுமட்டுமன்றி இப்பொழுது நகர்ப்புறத்திலிருந்து மக்கள் மீண்டும் கிராமப்புறத்தை நோக்கி இடம்பெயர்வதனை காணக்கூடியதாக இருக்கின்றது. இதன் காரணமாக நகர்ப்புறத்தில் வியாபாரம் செய்கின்ற பல நிறுவனங்கள் இந்த நிலைமையை சந்தித்த வண்ணம் உள்ளார்கள். அவ்வாறு வேலை ஆட்களை பெற்றாலும் அவர்களுக்குத் தகுந்த சம்பளத்தினை வழங்க முடியாது திணறுவதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

### கடனுக்கான வட்டி விகித அதிகரிப்பு

வியாபாரம் செய்பவர்கள் போதிய நிதி இல்லாத சந்தர்ப்பத்தில் அதிகரித்து வரும் மூலதன செலவினை ஈடு செய்வதற்காக வங்கி மற்றும் பிற நிதிநிறுவனங்களிடம் கடனுக்கு பணத்தினை பெற்று வியாபாரத்தை செய்வது சாதாரண விடயம். ஆனால் கடந்த காலங்களில் எதிர்பாராத விதமாக வட்டி வீதம் அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. இதன் காரணமாக பெற்ற கடனுக்கான வட்டியை செலுத்த முடியாத தன்மையும், அவ்வாறு சமாளித்து வட்டியை செலுத்தினாலும் பெற்றகடனை செலுத்த முடியாத நிலைமை உருவாகியுள்ளது. மற்றும் வட்டி விகித அதிகரிப்பு காரணமாக "லீசிங் - வாடகை கொள்வனவு" (Leasing & Hire Purchase) வாயிலாக பெற்றுக் கொண்ட வாகனங்கள் மற்றும் வியாபாரம் உபகரணங்களுக்கான கொடுப்பனவை செலுத்த முடியாத பாரிய நெருக்குதல் தற்பொழுது ஏற்பட்டது.

(11ஆம் பக்கம் பார்க்க)

### விற்பனை விலையை நிர்ணயிக்க முடியாத நிலைமை

நாளுக்கு நாள் இலங்கையின் ரூபாவின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றம், மூலப்பொருளுக்கான தட்டுப்பாடு, நிரம்பல் (Supply) குறைக்கப்பட்ட நிலையில் கேள்வியானது அதிகரித்தமை மற்றும் வியாபார போட்டி போன்றவற்றின் காரணமாக பண்டங்களின் அல்லது சேவைகளின் விற்பனை விலையினை சரியாக நிர்ணயிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சிறந்த இலாபத்தை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

### அரசியல் ஸ்திரமற்ற தன்மை

முன்னொருபோதும் இல்லாதளவுக்கு அரசியல் ஸ்திரமற்ற தன்மை தற்போது இலங்கையில் காணப்படுகின்றது. மிகக் குறுகிய காலத்தில் பல ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள், நிதி அமைச்சர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர்கள் போன்றோர் மாற்றப்பட்டு வந்தமையினை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலைமை அரசியல் ஸ்திரமற்ற தன்மையை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இதன் காரணமாக சீரான வியாபாரதிற்கேற்ற சந்தை நிலவரம் தற்பொழுது இல்லாமல் இருப்பது ஒரு துர்பாக்கிய நிலை என்றே நான் கருதுகின்றேன்.

### அரசின் ஸ்திரமற்ற கொள்கை

இலங்கையில் தேசியக் கொள்கை இல்லாத காரணத்தினால் காலத்திற்கு காலம் ஆட்சிப்பொறுப்பினை ஏற்கின்ற அரசாங்கம் தமக்கு ஏற்ற விதத்தில் பொருளாதார கொள்கைகளை மாற்றியவண்ணம் இருக்கின்றமையை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதன் காரணமாக ஸ்திரமற்ற தன்மை இலங்கையில் காணப்படுகின்றது. உதாரணமாக அரசாங்கத்தின் வரிக் கொள்கைகள், இறக்குமதி சார்ந்த கட்டுப்பாடுகள், நாணய கட்டுப்பாடு மற்றும் பணம் அச்சிடுதல் போன்றவற்றை குறிப்பிடலாம். இதன் காரணமாக வியாபாரம் செய்யபவர்கள் சிறந்த திட்டங்களை அறிமுகப்படுத்தி பின்பற்றினாலும், அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடு காரணமாக பல பின்னடைவுகளை சந்தித்து வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

### சுற்றுலாத்துறை பாதிப்பு

“ஆசியாவின் முத்து” என்று அழைக்கப்படுகின்ற எமது இலங்கை ஒரு அழகான சிறிய நாடு. நாட்டு மக்களின் 90% அத்தியாவசிய பொருட்கள் மற்றும் தேவைகள் இறக்குமதி வாயிலாகவே நிறைவு செய்யப்படுகின்றது. பாரிய உற்பத்தி செயற்பாடுகளினை மேற்கொள்ள முடியாத தன்மை காணப்படுகின்றது. கடந்த பல தசாப்தங்களாக இலங்கை வருமானம் சுற்றுலாத் துறையினை பெருமளவு சார்ந்து இருக்கின்றது. குறிப்பாக கடந்த மூன்று ஆண்டு காலமாக சுற்றுலாத்துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமையால் சுற்றுலாத் துறை வியாபாரத்தில் ஈடுபவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெரும் நெருக்குதல்களையும் நட்டத்தினையும் சந்தித்த வண்ணம் உள்ளனர். இதன் காரணமாக வருமானத்தில் பெரும் வீழ்ச்சி, குறிப்பாக அந்நிய செலாவணி வருமானத்தில் பெரும் வீழ்ச்சி மற்றும் வேலையில்லா பிரச்சினை போன்றனவற்றினை எதிர்நோக்குகின்றனர்.

### சர்வதேச நாணய நிதியக் கடன் கிடைப்பதில் தாமதமும் பொருளாதார நெருக்கடியும்.

தற்போதைய நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கடனுதவியைப் பெற்றுக் கொள்வதாயின் சீனாவிடம் இருந்து இலங்கை பெற்றுக் கொண்டுள்ள கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கு பத்து வருட சலுகைக் காலமொன்றை இலங்கை பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும் உடனடியாக அது சாத்தியம் இல்லை என்பதன் காரணமாக தற்போதைய நிலையில் எதிர்வரும் ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதம் வரை குறித்த கடனுதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். எனினும் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைக்கப் பெறாதவிடத்து இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலைமை மேலும் சிக்கலாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### உலகப் பொருளாதார மந்த நிலைமை

சர்வதேச பாதக நிகழ்வுகளும் இலங்கையை விட்டு வைக்கவில்லை. உதாரணமாக “ரஷ்யா-உக்ரேன் யுத்தம்”, “சீனா-அமெரிக்க விரிசல்கள்” போன்றவை இவற்றில் சில. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாரிய அளவில் பல சிக்கல்களை புதிது புதிதாக சந்தித்த வண்ணம் இருக்கின்றது.

### மசகு எண்ணெயின் விலை ஏற்றம்

உலக சந்தையில் மசகு எண்ணையின் விலை பல மடங்கு அதிகரித்து செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதே நேரம் இவற்றினை இறக்குமதி செய்வதற்கு தேவையான அமெரிக்க டொலரின் இலங்கைக்கு நிகரான ரூபாவின் பெறுமதி பாரிய அளவில் வீழ்ச்சியடைந்து செல்வதனால் இலங்கை அரசாங்கத்தினால் தேவையான மசகு எண்ணெயை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையும் காணப்படுகின்றது. இதன் காரணமாக உள்ளாட்டு உற்பத்தி, சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், ஏனைய வியாபார நடவடிக்கைகள் பாரிய சவால்களை முகம் கொடுத்தவண்ணம் இருக்கின்றது.

### இலங்கை மற்றும் உலக காலநிலை மாற்றம் (Climate Change)

புவி வெப்பமடைதல் தொடக்கம் உலக மற்றும் இலங்கையின் காலநிலைமை பாரியளவு மாற்றமடைந்து வருவதனை காணக்கூடியதாக இருக்கின்றது. தொடர் தேர்ச்சியான வரட்சி, மண்சரிவுகள், பெரு வெள்ளப்பெருக்கு, சுனாமி எச்சரிக்கை, நிலநடக்க அபாயங்கள் போன்ற இயற்கை அனர்த்தங்களினால் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டு வருவதை பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இதன் வாயிலாக பலர் தமது அன்றாட தொழில்த் துறையை கொண்டு செல்வதில் பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பிரச்சினை இல்லாத வாழ்க்கையே இல்லை, அதே நேரம் கடின உழைப்பின்றி வெற்றி இலக்கினை அடையவும் முடியாது. ஆகவே எவ்வாறான சிக்கல்கள் மற்றும் பிரச்சனைகள் வந்தாலும் அதை துணிவுடன் எதிர்கொண்டு வெற்றிகொள்வது மிகவும் முக்கியம். அந்த வகையில் சிறந்த செயற்றிட்டங்கள் வாயிலாக எட்ட வேண்டிய இலக்கினை இலகுவாக அடையமுடியும். அவற்றில் சில:

* இலக்கினை தெளிவாக தீர்மானித்தல். (Set Goals & Objectives).
* தேவைக்கு ஏற்ப இலக்கினை மாற்றியமைத்தல்.
* குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால பாதீட்டினை தயாரித்து செயல்படுதல்.(Short Term> Medium Term & Long Term Budget)
* முறையான நிதி நிலைமைக் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரித்து செயல்படுத்தல். (Fund Flow Statement & Cash Flow Statement)
* முடியுமானவரையில் கடனை மீள செலுத்துதல்.

வியாபாரத்திற்கு தேவையான மூலதனத்தினை வியாபாரத்தின் மூலமாகவே ஈட்டக்கூடிய திட்டங்களை செயல்படுத்துதல். (Internal Fund Generation Mechanism).

மேலதிகமாக மூலதன தேவை ஏற்படும் போது சொந்த பணத்தை பயன்படுத்துதல், வட்டியில்லா கடன் போன்றவற்றின் வாயிலாக பெற்றுக் கொள்ள வேண்டும்.

காலத்திற்கு காலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சட்டங்களை முறைப்படி கடைப்பிடித்து (Law Compliance) தண்டப்பணம் (Penalty) மற்றும் தேவையற்ற சட்ட நடவடிக்கை (Legal Action) போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

மீள்சுழற்சி முறையினை சிறந்த முறையில் பின்பற்றுதல். (Recycling Mechanism)

வினைத்திறன் செயலாற்றுகையை அறிமுகப்படுத்துதல்.

நவீன வியாபார யுக்தி முறையினை அறிமுகப்படுத்தி செயல்படுத்துதல். (JIT, Zero Based Budget, Do it Once System, etc.,)

முடியுமானவரையில் இறக்குமதி பொருட்களுக்கு பதிலாக உள்நாட்டு மாற்று மூலப் பொருட்களை பயன்படுத்துதல். (Export Substitute).

(23ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
12.03.2023



- தமிழ்க்கவி -

# எங்கள் வாழ்வும் வளமும்



❝ அது சிறிமாவோ அம்மையாரின் அரைக் கொத்தரிசிக் காலம். எல்லோரும் அறிந்த இரகசியம் அக்காலத்தில் பசி ஆட்சி செய்தது என்பதாகும். எங்கள் வீட்டில் பசி இல்லை. ஆனால் உணவு தயாரிப்பதில் பெரும் போட்டிநிலை இருந்தது. அதனாலேயே புதிய கண்டுபிடிப்புகளை இந்தக் குரக்கனை வைத்து செய்தோம். ❞

## குரக்கன் மா

"மந்திக்குரங்கே மதவடியில்தேவாங்கே பிஞ்சுக்குரக்கனுக்கோ பங்கு பற்ற வந்திருந்தாய்." என்றொரு கிராமியச் சொல்லடை. இருக்கிறது. குரக்கனில் பிஞ்சுக்குரக்கன் குரங்குகளுக்கு மிக வாலாயமானது.

இந்த குரக்கன் சேனைப்பிலவுகளில் நீர் குறைவாக பிடிக்கும் பகுதிகளான மேட்டுப்பகுதியில் விதைப்போம். இதை பின்னர் தோட்டப்பாத்திகளிலும் விதைக்கலாம். என அறிந்தோம். ஆனால் சேனைகளில் மானாவாரியாக (வானம் பார்த்து அதாவது மழையை நம்பி விதைக்கும் பூமியை 'மானாவாரி' என்பர். நான் நினைக்கிறேன் வானாமாரி மருவி மானாவாரியாகியிருக்கும்) இந்தக்குரக்கனை நாம் விதைக்கும் போது விதையில் மணலைக்கலந்து விசிறுவோம். காரணம் குரக்கன் மிகச்சிறியது. விதைக்கும் போது செறிவாக விழுந்து அடைசலாக முளைத்து வீணாகிப்போகும். எனவே, மணலைக் கலந்து விதைக்கும்போது, தேவையான இடைவெளியில் குரக்கனின் விதைகள் விழும். ஏறக்குறைய மூன்றரை மாதத்தில் அது அறுவடையாகிவிடும். நெல்லின் அளவே வளர்ந்தாலும் அதன் தண்டுகள் மட்டை போல இடையிடையே கணுக்களை கொண்டிருக்கும். இலைகள் மென்மையாக நெல்இலைகளைவிட அகன்றதாக கட்டையாக இருக்கும் ஆடுமாடுகள் விரும்பி சாப்பிடும். இதில் வீடு வேய இயலாது.

இப்போது இன்னும் குறைந்த வயதுடைய குரக்கன் இருப்பதாகத் தெரிகிறது. குரக்கன் பயிரை நெல்லைப் போல முழுமையாக அறுவடை செய்வது இல்லை. அதன் கதிரை மட்டும் கொய்து எடுப்போம். கதிரை சாக்குகளில் சேகரித்து மூடையாகக்கட்டி கொண்டு போய் வெய்யிலில் உலர வைத்து பின்னர் கைகளாலும் தடிகளிலும் கசக்கியும் அடித்தும் அந்த விதையை கதிரிலிருந்து அகற்றி குரக்கனை எடுப்போம். வெளியே எடுத்த குரக்கன் மிக மெல்லியதான ஒரு தோலை சருகு போல போர்த்தியிருக்கும். அவற்றை உரலில் இட்டு தீட்டி எடுக்க வேண்டும். அதன்பின் மொரு மொருக்க வெய்யிலில் காயப் போட்டு அந்த சிவந்த குருகுருப்பான குரக்கனை திரிகைக் கல்லிலிட்டு அரைத்து மாவாக்குவோம். இந்த மாவில் தேங்காய்ப்பூ கலந்து பிட்டாகவும் ரொட்டியாகவும் செய்து உணவாக உண்போம்.

என்ன வாசிக்கும் போதே களைப்பாக இருக்கிறதா? வரகு தினை சாமை இவைகளிலும் இந்தளவுக்கு செப்பம் பண்ண வேண்டியதிருக்கும். ஆனால் உடலின் ஆரேக்கியத்திற்கும் சுவைக்கும் இவற்றின் எதிர் நிற்க முடியாது. நாங்கள் இலகுவாக இவற்றை எப்படி மறந்தோம் என்பது ஒரு பெரிய வரலாறு. இன்று நோய் வந்த பிறகு பத்தியமாக சாப்பிடவேண்டும் என வைத்தியர் சொன்ன பிறகு வரகையும் தினையையும் சாமையையும் குரக்கனையும் தேடுகிறோம்அவை பத்தறுந்து விடவில்லை. அவற்றையும் அழகிய பொலித்தீன்பைகளில் அடைத்து கடைகளில விற்கிறார்கள் என்றால், நாம் ஏன் அவற்றை கைவிட்டோம். இப்போது கடைகளில் தேடுகிறோம்.



இதுதான் உலகுக்கு விவசாயிகள் கொடுத்த கொடுக்கும் பெருங் கொடை. அவர்களுக்கு சர்க்கரை வியாதி மூட்டு வலி, மாரடைப்பு என எதுவும் இல்லாமல் வாழ்ந்த ரகசியம். இப்போது வியாதி வந்தவர்கள் தேடி வாங்கும் பொருளாக குரக்கன் மா இருக்கிறது. குரக்கனோடு நாங்கள் பட்ட அவஸ்த்தையை மட்டுமல்ல அதன் பயன்பாட்டில் நாங்கள் பெற்ற புதிய உணவு வகைகளையும் உங்களோடு பகிர வேண்டாமா?

அது சிறிமாவோ அம்மையாரின் அரைக் கொத்தரிசிக் காலம். எல்லோரும் அறிந்த ரகசியம் அக்காலத்தில் பசி ஆட்சி செய்தது. எங்கள் வீட்டில் பசி இல்லை. ஆனால் உணவுதயாரிப்பதில் பெரும் போட்டிநிலை இருந்தது அதனாலேயே புதிய கண்டுபிடிப்புகளை இந்த குரக்கனை வைத்து செய்தோம்.

என்தந்தை ஓர் ஏக்கருக்கும் அதிகமான நிலத்தில் குரக்கனை விதைத்துவிட்டார். புதுக்காணியா? சும்மா கமறிக்கொண்டு வளர்ந்தது பயிர். கருகருவென வளர்ந்த குரக்கனை சோளன் போல என்று சொன்



னாலும் தகும் விரல்களைக் குவித்தாற் போல பெருங்கதிர்கள். நாங்கள் குடும்பம் முழுதுமாக இறங்கி அறுத்து கதிர்களை காயவைத்து கட்டக்கூட சாக்கை மினைக் கெடுத்தாமல் கொண்டுபோய் ஓர் அறை நிறைய கொட்டி வைத்ததோம். எங்கள் வீடு அக்கா வீடு, என் மாமா வீடு, சித்தப்பா வீடு என எல்லா வீட்டிலும் குரக்கன் பிட்டுத்தான். எல்லோரு க்கும் இலவசந்தான். ஆனால் என்ன செய்வது இலவசமாக கிடைக்கும் பொருளை சாப்பிடுவது கஷ்டமாயிற்றே. தினம் தினம் குரக்கன். வீடு வாசலெங்கும் குரக்கன் தூசி. என் தங்கை ஒருநாள் குரக்கன் மாவில் தேங்காய்ப் பாலைக் கலந்து அதை களியாக கிண்டி ஒருபகுதியை சீனிகலந்தும் ஒரு பகுதியை மிளகு கலந்தும் தயாரித்தாள். அருமையாக இருந்தது. அப்போது அங்கே வந்த இந்திய பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு கிழவி (மன்னிக்கவும் மூதாட்டி என்று சொல்லும் போது என் மனதுக்கு அந்நியமாக தெரிகிறது.) உணவைப்பங்கிட வந்தார். அவர் இதைக் கண்டதும் "அடேய்ங்கப்பா கேவருக்களியா? பொட்டிட்டாப்ல கீரைக்கடைசலிருக்கணும். இல்ல கோழிக் கொழம்பு. அம்புட்டுத் திங்கலாமே ப்ச்ச" என்றாரே பார்க்கலாம். உடனேயே ஓடி பசலி, குப்பைக்கீரை முள்ளிக்கீரை தண்டங்கீரை, பனங்கீரை சாரணை என பலதும் பத்துமாக பறித்துவந்து அம்மாவிடம் கொடுத்து கானக் கொச்சிகாயை காரத்துக்கு சேர்த்து கடைந்து ஒரு தாளி தமும் செய்து சாப்பிட்டால். கிண்டி வைத்த களி போதவில்லை. அதுதான் மாவு தயாராக இருந்ததே மீண்டும் கிழறினோம். அடுத்து கொஞ்ச நாட்களுக்கு பிட்டு றொட்டியுடன் களியும் சேர்ந்துகொண்டது. மாமி இந்த மாவில் இடியப்பம் பிழிந்து வெற்றி கண்டாள். ஆரம்பத்தில் அது உடைந்து போனாலும் கொஞ்சம் கோதுமையை



கலந்து விட அருமையாக வந்தது சுவையும் அபாரம். நான் குரக்கனை எனது பங்குக்கு எடுத்து அரைக்கப் போனால் திரிகைக் கற்கள் இரண்டும் ரொம்ப பிஸி. மெதுவாக சில்லறையை எண்ணிப் பார்த்தேன். மில்லிலே கொடுத்தால் பத்துச் சதத்துக்கு நான்கு றாத்தல் அரைக்கலாம். ஒரு மாட்டுத்தாள் பையில் போட்டு எடுத்துக் கொண்டு போய் அருகிலிருந்த மில்லில் அரைத்து எடுத்து வந்தேன். மாவோ அதிஅற்புதமாக பசுந்தாக அரைபட்டிருந்தது. வந்ததடியம்மா எங்கள் திரிகைக் கற்களுக்கு ஆபத்து. அவற்றை சீண்ட ஆளில்லாமல் ஒதுக்கி வைத்தோம். அவரவர் மில்லுக்கு போனோம்.

இந்த பசுந்தான மாவில் கொஞ்சமாக உழுந்தைக்கலந்து தோசையும் வார்த்தோம். அப்படியே இன்னும் பல கண்டுபிடிப்புகளுடன் ஒரு வழியாக அறை நிறையக் கொட்டி வைத்திருந்த குரக்கன் ஒழிந்தது. அதற்குப்பிறகு குரக்கன் விதைக்க அப்பா நிலம் ஒதுக்கினால் நாங் கள் அம்மாவுடன் சதியாலோசனை பண்ணி அந்த இடத்தில் பயறையோ உழுந்தையோ போட்டுவிடுவோம். ஆனால் ஆசைக்கு தின்னவென ஒரு அரை ஏக்கரில் மட்டும் குரக்கன் விளையும். அட நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? எங்களுடைய தானியங்களோடு நாங்கள் மல்லுக்கட்ட, அரைத்த பசுந்தான் கோதுமைமா கடையில் இருபத்தைந்து சதமாக வந்துவிட்டதே. பின் சொன்னேனே குரக்கனை விதைச்சு அதை வளர்த்து குரங்குக்காவல், பண்டிக்காவல், பயிரில் மானுக்கு முயலுக்கு காவல், என்று கண்ணோ புண்ணோவென்று காத்து வெட்டி அவ்வளவு பக்குவம் செய்து. ஸ்ஸ்ஸப்பா கோதுமை மா - கூப்பன்மா சமைக்கிறதும் தின்னிறதும் சுகம். நோய் வரத்தான் செய்யும் அதற்காக? அதற்கும் மருந்து வருந்தானே. *



# பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தும் தும்பு கைத் தொழில்

தும்பு உற்பத்தி இன்றைய கால கட்டத்தில் தனிமனித வருமானம் குடும்ப வாழ்வாதாரம் போன்றன மாதாந்த பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்துவது மட்டும் அல்லாமல் ஒரு நாட்டின் மொத்த தேசிய வருமானத்திலும் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. அவ்வகையில் நடுத்தர மற்றும் சுய தொழில் முயற்சிகள் இலங்கை பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த கொள்கை நோக்கங்களில் ஒரு முக்கியமான தந்திரோபாய அம்சமாக அடையாளங் காணப்பட்டிருக்கின்ற அதே வேளை இது பொருளாதார வளர்ச்சி, பிராந்திய அபிவிருத்தி,



வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வறுமைக்கான வலுவூட்டல் தொடர்பிலான மாற்றத்துக்கான ஒரு உந்துசக்தியாகவும் இருக்கின்றது.

இவ்வாறான சுய தொழில் முயற்சிகள் துறையானது பின்தங்கிய கிராமங்களை விருத்தி செய்யக்கூடியளவிலான பங்களிப்பினை வழங்கக்கூடிய ஒரு முயற்சியாகவே கருதப்படுகின்றது. இச்சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் முதலீடு செய்வதற்கும், பின்தங்கிய மற்றும் விருத்தி அடைந்த நோக்கி பிரதேசங்களுக்கு இடையிலான இடைவெளியினைக் குறைப்பதற்கான தூண்டுதலாகவும் விளங்குகின்றமையால் இது நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கான ஒரு நல்ல அடித்தளமாகவும் விளங்குகின்றது. அந்த வகையில் உள்ளூர் வளங்களை பயன்படுத்துவதன் மூலம் மனிதனுடைய தேவையைகளை பூர்த்தி செய்வதற்கு மனித முயற்சியில் மேற்கொள்ளப்படும் பொருளாதார முயற்சி கைத்தொழில் என்று கூறலாம்.



முன்னைய காலத்தில் விவசாயத்தை மையமாக கொண்டு விளங்கிய பொருளாதாரம் இன்று சுய கைத்தொழில் முயற்சிகளுக்கு கூடிய முக்கியத்தினை கொடுக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் முக்கியத்துவம் பெறுகின்ற உள்ளூர் கைத்தொழில்களாக தும்பு கைத்தொழில் ஆடைக் கைத்தொழில், பாரம்பரிய கைப்பணி கைத்தொழில் என்பவற்றைக் குறிப்பிட முடியும். அதிலும் முக்கியமாக தும்புக் கைத்தொழில் செய்கையானது முக்கியமான ஒரு கைத்தொழிலாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலத்தில் இருந்து உபகரணங்கள் இல்லாது கையினாலேயே தும்புசார் அனைத்து உற்பத்திகளையும் செய்து சந்தைப்படுத்தி வந்துள்ளனர். இப்போதும் இவ்வாறான பாரம்பரிய முறை நடைமுறையில் இருந்து வருகின்ற போதிலும் பெருமளவில் உபகரணங்களின் உதவியின் மூலம் தும்புக் கைத தொழிலை மேற்கொள்ளுமளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.

**“இன்று கயிற்றிற்கான கேள்வி அதிகரித்து வருவது நாம் அறிந்த விடயமே. அந்த வகையில் தும்பு உற்பத்திப் பொருட்களில் முதன்மையாக விளங்குவது தும்பிலிருந்து திரிக்கப்பட்ட பலவகையான கயிறுகளேயாகும். இலங்கையின் தும்புத் தொழிற்துறையானது ஏறத்தாழ 35,000 தொழிலாளர்களைக் கொண்டுள்ளது. இதில் ஏறத்தாழ 75-90% பெண்களாகவே உள்ளவர்.”**

தும்புக் கைத்தொழில் முயற்சிகளுக்கான முறையான பயிற்சி நிலையங்கள் மற்றும் முறையான பயிற்சி முறைகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. பெரும்பாலும் பரம்பரை பரம்பரையாக தொழில்சார் அனுபவங்களையும் யுக்திகளையும் தலைமுறைகளிற்கிடையில் கடத்துவதாகவே பரவலாக காணப்படுகிறது. எனினும் இன்றளவில் தும்பு கைத்தொழிலிற்கான கேள்வி அதிகரித்து வருகின்ற வகையில் பலர் இதில் நாட்டம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். அந்த வகையில் தும்புத் தொழில் என்பது தென்னந் தும்பை பிரதான மூலப் பொருளாகப் பயன்படுத்தி பல்வேறு யுக்திகளின் மூலம் ஆக்கபூர்வமானதாக மேற்கொள்ளப்படும் கைத்தொழில் ஆகும்.

தேங்காய் மட்டை அல்லது உரிமட்டைகளை பதப்படுத்துவதன் மூலம் தென்னந் தும்பைப் பெற்று அதில் இருந்து தும்பைப் பயன்படுத்தி பல பயன்பாடுகள் மிக்க முடிவுப்பொருட்களை உற்பத்தி செய்தல் வரையிலான செயற்பாடுகளை தும்புத் தொழில் என்பதற்குள் குறிப்பிட முடியும்.

தேங்காய்களில் இருந்து அதன் மட்டைகள் அகற்றப்படுதல், மட்டைகளில் தும்பை வேறுபடுத்தி அவற்றை பதப்படுத்தி அத்தும்பை பயன்படுத்தி, தும்புத்தடி, கயிறு மற்றும் கால்மிதி ஆகிய பொருட்களின் உற்பத்திகளை செய்து அதனை விற்பனை செய்யும் செயற்பாடுகள் போன்றன தும்பு



தொழிலின்செயற்பாடுகளாய்அமைகின்றன.

தேங்காய்கள் விற்பனை செய்யப்படும் நோக்கோடு தென்னம் தோட்டங்களில் தேங்காய்கள் பெறப்பட்டு சந்தைக்கு கொண்டு செல்லப்படும். சந்தையில் தேங்காய்களில் உள்ள மட்டைகள், அலவாங்கு போன்ற ஆயுதத்தைக் கொண்டு தேங்காயில் இருந்து அகற்றப்படும். இச்செயற்பாடு “தேங்காய் உரித்தல்” என கூறப்படும். பின்னர் தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படும். தேங்காயில் இருந்து அகற்றப்படும் உரிமட்டைகள் பிறிதாக சேகரிக்கப்படும்.

உரிமட்டைகள் சேகரிக்கப்பட்ட பின்னர் அதனை தும்புத் தொழில் மேற்கொள்பவர்களின் பிரயோகத்திற்காக தொழில் முனைவோரால் கொள்வனவு செய்யப்பட்டு அவற்றை உவர்ப்புத் தன்மை கொண்ட நீர்நிலைகளுக்கு அருகாமையில் கொண்டு சேகரிக்கப்படும். மட்டைகளை வாங்கிய தொழில் முனைவோர் நீர் நிலைகளின் கரைகளில் தேங்காய் மட்டைகளை புதைத்து விடுவார்கள். புதைக்கப்பட்ட மட்டைகள் நீர் நிலைகளின் கரைகளில் 6 மாதம் முதல் 1 வருடம் வரை ஈரப்பதன் உள்ள நிலத்தின் அடியில் ஊறவிடப்படும். குறித்த மட்டைகள் 6 மாதம் தொடக்கம் 1 வருடம் வரை குறிப்பிட்ட பதத்தை அடைந்ததன் பின்னர். உரிமட்டைகளை மீண்டும் தோண்டி எடுத்து அவற்றை ஒவ்வொரு மட்டையாக பிரித்து எடுப்பார்கள்.

எல்லா மட்டைகளிலும் உள்ள தோலையும் தும்பையும் கையால் பிரித்து எடுப்பார்கள். தும்பில் இருந்து பிரித்தெடுக்கப்படும் தோல் வீடுகளில் பூ மரங்கள் வளர்க்கும் போது பசளைகளாக பயன்படுத்தல் போன்ற தேவைகளிற்காக விற்பனை செய்யப்படும். அதன் பின்னர் தும்பில் ஊறிக் கணப்படும் நீரை புழிந்து வெளியேற்றியபின் தும்பை மரக்கட்டை அல்லது சீமெந்து கொங்கிறீற்றுக் கட்டி ஒன்றில் வைத்து இரும்பு பொல் ஒன்றால் தட்டி அடித்து பதப்படுத்துவார்கள். இதனை அவர்கள் மட்டை தட்டல் என அழைப்பார்கள். இந்த செயற்பாடு சில இடங்களில் இயந்திரங்களைக் கொண்டும் செய்யப்படுகின்றது.

மட்டை தட்டிப் பதப்படுத்தி பெறப்படும் தும்பை உலரவிட்டு அடுத்த கட்ட உற்பத்திக்கான ஆயத்த தும்பாக மாற்றி அவற்றை சேகரித்து எடுப்பார்கள். இவ்வாறே தும்பு உற்பத்தி செய்முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றைய காலகட்டத்தில் இயற்கை உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தும் நிலையில் தாவர மூலப்பொருளான தும்பு மற்றும் தும்பிலிருந்து பெறப்படும் உற்பத்திப் பொருட்கள் மீதான கேள்வியும் அதிகரித்து வருகிறது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தும்பானது தடித்த, நீளமான, தூய்மையான இழைகளைக் கொண்டிருப்பதாக உலக தும்புச் சந்தையில் கருதப்படுகிறது. இத்தும்பானது பெருமளவு மரபார்ந்த தும்புக் கைத்தொழில் நுட்பங்களைப் பின்பற்றியே உற்பத்தி செய்யப்படுகிறது.

இன்று கயிற்றிற்கான கேள்வி அதிகரித்து வருவது நாம் அறிந்த விடயமே. அந்த வகையில் தும்பு உற்பத்திப் பொருட்களில் முதன்மையாக விளங்குவது தும்பிலிருந்து திரிக்கப்பட்ட பலவகையான கயிறு



களேயாகும். இலங்கையின் தும்புத் தொழில் துறையானது ஏறத்தாழ 35,000 தொழிலாளர்களைக் கொண்டுள்ளது. இதில் ஏறத்தாழ 75-90% பெண்களாகவே உள்ளனர். கைத்தொழில் துறையில் பெண்களின் ஈடுபாடு இலங்கையில் அதிகமாக காணப்படுகிறது.

இதற்கு குளம், மடு,வாவி, குட்டை போன்ற நீர் நிலைகள் தும்புத் தொழிலின் முக்கிய செயற்பாடுகளான மட்டை புதைத்தல், தட்டல் போன்றவற்றுக்குத் தேவையான இயற்கைச் சூழலமைவையும் கொண்டுள்ளமை சிறப்பான விடயமே. கிராமிய சிறு குடிசைக் கைத்தொழில் திணைக்களத்தின் மூலம் கயிற்று திரிக்கும் தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டன. நெல் அறுவடை இயந்திரத்தின் அறிமுகத்திற்கு முன்னதான காலப்பகுதியில் நெல் அறுவடைக்குப் பயன்பட்ட கயிறுகளான உப்பட்டிக் கயிறு, வரிச்சிக் கயிறு, தேடாக்கயிறு போன்றன தும்பிலிருந்து தயாரித்து விற்பனை செய்யப்படுகின்றன.

தும்பளையானது இலங்கையின் வடக்கு பகுதியிலுள்ள பருத்தித்துறைக்கு அண்மையில் ஒரு கிராமம் ஆகும். தும்பளை என்னும் பெயர் “தும்பு, அளை” என்பதிலிருந்து மருவி வந்திருக்க வேண்டும் எனும் கருத்துமுண்டு. அளை என்பது வாய்க்கால் அல்லது ஓடையைக் குறிக்கும் சொல்லாகும். பண்டைய காலத்தில் தும்புக் கைத்தொழிலே இக்கிராமத்தின் முதன்மைப் பொருளாதார நடவடிக்கையாக இருந்திருக்கலாமென சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தேங்காய் மட்டைகளிலிருந்து தும்பைப் பெறுவதற்கு அவற்றை நீரில் சில காலம் ஊற வைக்க வேண்டும். இதற்காக சிறு ஓடைகளை வெட்டி, நீர் பாய்ச்சி அதனுள் மட்டைகளைப் புதைத்து வைப்பது வழக்கமாகும்.

அது மட்டுமல்லாது மருதமுனையிலுள்ள பிரான்ஸ் சிற்றி என்னும் பிரதேசத்தில் சிறியளவிலான தும்புத் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டு தும்புப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இத்தொழிற்சாலையில் சுமார் 30 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அத்தோடு இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள வல்வெட்டித்துறை ஒரு முக்கிய துறைமுக, கப்பல் கட்டும் நகராக இருந்தமையால் இங்கே தும்பு மற்றும் கயிறு திரிக்கும் கைத்தொழில் ஒரு முக்கிய கைத்தொழிலாக பல நூற்றாண்டு காலமாக இருந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் கச்சாய் தும்பு உற்பத்தி நிலையம், அல்லாரை தும்பு கைத்தொழில் உற்பத்தி நிலையம் கொழும்புத்துறை, பளை, முல்லைத்தீவு, வடமேல் மாகாணம், விருதோடை, கொகோ லங்கா தும்புக் கைத்தொழில் அமைப்பு, புத்தளம் போன்ற இடங்களிலும் தும்பு கைத்தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அங்குள்ள அநேகமான மக்களின் ஜீவனோபாய தொழிலாக தும்புக் கைத்தொழில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமே.

நாம் தினமும் எத்தனையோ விதமான பொருட்களை நுகர்கின்றோம் . அதில் பல வெளிநாடுகளில் இருந்து எமது பிரதேசத்திற்கு இறக்குமதி செய்து விற்பனை செய்யப்படுகின்றன.



ஆனால் அப்பொருட்களை விட மிகவும் சிறந்த பொருட்கள் எம் தேசத்து முயற்சியாளர்களால் உருவாக்கப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் முன்னனி வகிக்கும் வெளிநாட்டு வெற்றியாளர்களையும், முயற்சியாளர்களையும் ஆச்சரியத்தோடு பாராட்டுகின்றோம். ஆனால் கடுமையான அனுபவங்களை வெற்றிக்குரிய படியாகக் கொண்டு முன்னேறிய எத்தனையோ முயற்சியாளர்கள் எம் பிரதேசத்தில் உள்ளனர் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இவர்கள் திறமைசாலிகளாகவும் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் இருந்து விலகாதவர்களாகவும், எமது தேசத்தின் வளங்களைக் கொண்டு நாம் நுகரும் பொருட்களை உற்பத்தி செய்து சமூக நன்மை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இவர்களது முயற்சியானது நாம் அனைவராலும் பாராட்ட வேண்டியது அவசியமே. தும்புக் கைத்தொழிலுக்கென்று எமது சந்தையில் நிலவும் கேள்விக்கேற்ப அவை அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அக் கைத்தொழிலில் ஈடுபட்டுவருபவர்களுக்கும் ஆர்வமுள்ளவர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு பயிற்சிகள் வழங்கப்படும் போது ஏனையவர்களுக்கும் ஈடுபடக்கூடிய வாய்ப்பும் ஆர்வமும் ஏற்படும் அதன்போது தும்புக் கைத்தொழிலும் விருத்தியடையும். எமது நாட்டில் பல தொழில் பயிற்சி நிலையங்களில் பல வகையான தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டுவரும் வேளையில் எமது கிராமத்தில் எமது வீட்டிலிருந்தவாறே செய்யக்கூடிய ஒரு தொழிலான தும்புக்கைத்தொழிலை பயிற்சி நெறியில் சேர்த்துக்கொண்டால் பாரிய ஓர் ஊக்கமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மேலும் சந்தைப்படுத்தல் முயற்சிகளில் கூடிய கவனம் எடுப்பதன் மூலம் இதற்கான கேள்வியை அதிகரித்துக் கொள்ள முடியும். அந்த வகையில், இலத்திரனியல் மயமான முறையில் இதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் உலகளாவிய ரீதியில் அதீத மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. சிறுவர் முதல் முதியோர் வரையிலும், தனி மனிதன் முதல் பாரிய நிறுவனங்கள் வரையிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பாவனை வியாபித்துள்ளது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை தமது வியாபார நடவடிக்கைகளை பன்னாட்டு நாடுகளிலும் விருத்தி செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதன் மூலம் பல விற்பனை வாய்ப்புக்களையும் வளங்களையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.



(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை என்பது நாடு என்பதை விட இது அவர்களுக்கு ஒரு பிரதேசம் என்பது மட்டுமே. ஆக இந்த பிரதேசத்தினூடாக தங்கள் தங்கள் நாடுகளுக்கு ஏற்படும் சாதகம் மற்றும் பாதகம் போன்ற விடயங்களில் தான் அவர்கள் கவனம் செல்லும் என்பதை வரலாற்றினை பின்னோக்கி பார்த்தால் எமக்கு புலப்படும்.

என்னை பொறுத்தவரையில் சீனா தன்னுடைய கடனினை ஒரு துருப்புச்சீட்டாக பயன்படுத்தி இலங்கை பிரதேசத்தில் தன்னுடைய விருப்பு வெறுப்புகளை சாதிக்க முற்படும். தனக்கு அனுகூலமான பரிந்துரைகளையும் பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசாங்களுக்கு வழங்கியுள்ளது. இதேவேளை இந்தியாவினை பொறுத்த வரையில் சீனவுடன் பொருளாதார ரீதியாக யுத்தும் செய்யும் வல்லமை இப்பொழுது இல்லை என்பதனை புரிந்துள்ளது. ஆகையால் குறைந்தபட்ச சேதாரத்துடன் இலங்கையின் விடயத்தை கையாளுதல் அல்லது தனது நாட்டின் பிராந்திய பாதுகாப்புக்கு அதிகூடிய கவானம் செலுத்த கூடிய இலங்கையில் உள்ள குறிப்பிட்ட பிரதேசத்தை யாவது தன்னுடைய முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் நல்லது என்ற நிலைப்பாட்டிற்கு வந்துள்ளதாகவே தெரிகின்றது.

ஆகவே இவர்கள் இருவருடைய இலங்கை சார்ந்த செயற்பாடுகளும் நிச்சயமாக இலங்கையை ஒரு நாடாக முழுமையாக ஏற்று செயற்படும் நிலையில் இல்லை என்பதே உண்மையாகும். மாறாக இவர்கள் இதனை ஒரு இந்து சமுத்திரத்தில் இருக்கும் ஒரு பிரதேசமாகவே கருதுகின்றார்கள். ஆகவே இவர்களுடைய அண்மைய செயற்பாடுகள் நிற்சயம் இலங்கை மக்களைப் பொறுத்த வரையில் மிகவும் சுவையானதாக அமைய மாட்டாது என்பதே உண்மை. இதனை வருங்காலம் எமக்கு கண்முன்னே காட்டும். அதிலும் இலங்கையின் வடக்கு தமிழர்களின் நிலை மிகவும் கேள்விக்குறியாகும்.

## இலங்கையின் எதிர்காலம்.

நான் முன்னர் குறிப்பிட்டது போல் சிறு குழுக்களாக செயற்படும் வெளிநாடுகளில் வாழும் எமது மக்களாலும், அவர்கள் இலங்கை அரசாங்கம் கடனை மீள வழங்கும் என்ற விடயத்தில் நம்பிக்கை இழந்து உள்ள காரணத்தினாலும் diaspora இன் பணத்தின் மூலம் நாட்டை மீட்க முடியம் என்ற நம்பிகை ஒரு கேள்விக் குறியாகவே மாறிப்போயுள்ளது.

இதற்கு தீர்வாக என்னிடம் உள்ள திட்டத்தினை உங்களுடன் பகிர்வதற்கு ஆசைப்படுகின்றேன். எமது diaspora மிகப் பிரதான பிரச்சனை தாம் கஸ்டப்பட்டு சம்பாதித்த பணத்தினை தங்கள் நம்பிக்கையை வெல்லாத இலங்கை அரசிடம் எவ்வாறு கையளிக்க முடியும் என்பதாகும். அதேவேளை இலங்கை தன்னுடைய கடன்களை மீள் கட்டமைக்க வேண்டும் என்றால் ஒரு நாடு குறைந்தது 10 billion USD அளவுக்கு குறைந்த வட்டிவீதத்தில் சற்று நீண்ட கால கடன் மீள்செலுத்தும் வகையில் bilateral கடன் ஒன்றினை பெற வேண்டும். ஏனெனில் நாடுகள் வழங்கும் bilateral கடன்கள் தான் நாடுகளுக்கு இடையில் உள்ள நட்பு காரணாமாக அதிகூடிய due diligence இல்லாமல் எந்த சந்தர்ப்பத்திலும் வழங்க முடியும்.

ஆனால் இந்த அளவான கடன் தொகையை எந்த நாடும் தன்னுடைய மக்களின் வரிப்பணத்தில் இருந்து இலங்கைக்கு வழங்க இப்பொழுது முன் வராது. ஆனால் இந்த பணத்தினை ஒரு நிறுவனம் வழங்கும் என்றால் அதனை இலங்கைக்கு தனது சார்பாக bilateral கடனாக வழங்குவதற்கு ஒரு சில நாடுகள் விருப்பம் தெரிவிக்கும். ஏனெனில் இது தன்னுடைய மக்களின் பணம் இல்லை அத்துடன் இவ்வாறு proxy ஆக செயற்பட்டால் இலங்கையின் விவகாரத்தில் தன்னுடைய ஆளுமையை செலுத்தமுடியும். இவ்வாறு நம்பும் நாடுகளாக கனடா, UK மற்றும் france இனை நாம் கருதலாம்.

ஆகவே, வெளியாடுகளில் வாழும் எமது மக்கள் இலங்கைக்கு உதவுவதற்கு முயற்சித்தால் அல்லது இலங்கையை அதளபாதாளத்தில் இருந்து வெளியில் கொண்டுவரும் செயற்பாட்டில் நீங்களும் ஒரு பங்களாராக வரலாற்றில் இணைய விரும்பினால் நான் கூறும் இந்த திட்டத்தினை சற்று சிந்தித்து பாருங்கள்.

சிங்கபூரை அல்லது அதற்கு ஒத்த வேறு நாட்டினை தலைமையகமாக கொண்ட கடன்வழங்குவதனை பிரதான நோக்கமாக கொண்டுள்ள நிறுவனம் ஒன்றினை கூட்டிணைக்க வேண்டும். இந்த நிறுவனத்தில் எமது புலம்பெயர் உறவுகள் முதலீடுகள் செய்வனூடாக அவர்களுடைய முதலீடுகளுக்கு அமைவான பங்குரிமையை பெற்றுக்கொள்ள முடியும். இப்பொழுது இந்த நிறுவனம் கடன் வழங்கும் பிரதான நோக்குடன் கூட்டிணைக்கப் பட்டுள்ளதால் உதாரணத்திற்கு UK அரசாங்கத்துடன் உடன் ஒரு உயர்மட்ட பேச்சுவார்த்தையினை மேற்கொண்டு இலங்கைக்கு தேவையான bilateral கடனினை வழங்க முடியுமா என்பதையும் அதற்கான முதலீட்டினை நாம் உருவாக்கிய இந்த நிறுவனத்தினூடாக வழங்க முடியுமா என்பதனையும் அறிந்துகொள்ள வேண்டும்.

இது ஒரு விசித்திரமான முறையாக தோன்றினாலும் இதற்கான வழிமுறைகள் என்பதனை நான் எனது ஆய்வுகள் மூலம் அறிந்துள்ளேன். UK இனை பொறுத்த வரையில் இலங்கை விவகாரத்தில் ஈடுபட அதிகம் நாட்டம் காட்டும். ஆதேவேளை இந்த கடன் பணத்தினை நாம் உருவாக்கிய நிறுவனம் வழங்க முன்வருவதால் உள்ளூர் அரசியல் மட்டத்திலும் அதிகம் அழுத்தம் இருக்க முடியாது. G 7 நாடுகளில் ஒன்றான UK bilateral கடனை வழங்க முன்வரும் போது இலங்கை மாத்திரம் அல்ல இந்தியா மற்றும் சீனா கூட தடைகளை ஏற்படுத்த முடியாது.

எமது நிறுவனத்தின் கோரிக்கைக்கு UK அரசாங்கம் சம்மதித்தால் எம்மவர்கள் தங்களுடைய பணத்தினை இந்த நிறுவனத்தில் பங்குகளை வாங்குவதனூடாக முதலீடு செய்ய முன்வருவார்கள். ஏனைனில் UK ஊடாக வழங்கப்பட்ட கடன் என்பதால் இலங்கை இதற்கு உத்தரவாதம் வழங்க வேண்டிய நிலை ஏற்படும். வெறுமனவே கடன் மாத்திரம் அல்லாமல் இதற்கான குறிப்பிட்ட வட்டிவருமானத்தினையும் UK அரசாங்கத்துடன் எமது நிறுவனம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்திற்கு அமைவாக பெறமுடியும். இலங்கைக்கும் நீண்ட கால அடிப்படையில் கடனை மீள செலுத்தகூடிய ஒரு soft கடனினை பெற்ற திருப்தி உருவாகும்.

இது மாத்திரம் அல்லாமல் ஓர் அரசியல் ஆளுமையையும் நாம் பயன்படுத்துவோம் என்றால் எமக்கான அரசியல் கோரிக்கையையும் UK government ஊடாக எம்மால் முன்வைக்க முடியும். இது ஒரு நிபந்தனையாக கூட நாம் வழங்ககூடிய நிலையில் நாம் வந்துவிடுவோம். ஏனெனில் இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப தேவையான பணப்பலத்தினை நமது நிறுவனமே வழங்குகின்றது.

அதாவது, என்னுடைய எண்ணமாக பின்வரும் விடயத்தினை குறிப்பிட விருப்புகிறேன். நாம் ஒரு நாடு, எமது நாட்டுக்கு ஒரு சட்டம், ஆனால் அது எல்லோருக்குமான பொதுவான சம உரிமைகள் உள்ள சட்டமாக அமையவேண்டும். மதம், இனம், மொழி கடந்த இலங்கைக்கு முன்னுரிமை என்ற கருப்பொருளுடன் இலங்கைக்கான புதிய constitution உருவாக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில் Constitution உருவாக்கப்பட்டதன் பின்னர் முழுமையான கடனை வழங்க முடியும் என்ற நிபந்தனை வைத்தால், பிரிவுபடாத இலங்கையில் நாம் எல்லோரும் இலங்கையராக மிடுக்குடன் வாழமுடியும் காலம் வெகுதொலைவில் இல்லை.

இப்போ இல்லையென்றால் எப்போ?

# தோடைப் பயிர்ச் செய்கையில் அதிக இலாபம் பெறுவது எப்படி?



**ஆனந்தன் பிரேம்நாந்**
**லக்சி பண்ணை**

தோடை, வெப்பம் மற்றும் மித வெப்ப மண்டலங்களில் அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகிறது. இம்மரத்தின் தாயகம் தென்கிழக்கு ஆசியாவாகும்.

தோடை சிட்ரஸ் வகையைச் சேர்ந்த அமிலத் தன்மை இல்லாத பழமாகும். தோடையானது தற்போது இந்தியா மற்றும் ஏனைய ஆசிய நாடுகளிலும் பரவலாக பயிர்செய்யப்பட்டு வருகிறது.

### எப்படி பயிரிடுவது?

ரங்காபுரி, மற்றும் நாட்டு வகைகள். ஆகியவை நடுகைக்கு ஏற்றவை. ஆகஸ்ட் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை நடவு செய்யலாம். மழை காலங்களில் நடுகை செய்யக்கூடாது. தோடை, தேசி போன்ற பயிர்கள் குறைந்த நீர் கட்டமைப்பை கொண்டவையாகும்.

### மண்

தண்ணீர் தேங்காத செம்மண் மற்றும் செம்மண் கலந்த சரளைமண், இருவாட்டிமண் போன்ற நிலங்கள் ஏற்றவை. மண்ணின் கார அமிலத் தன்மை 6.5 முதல் 7.5 வரை இருக்கவேண்டும்.

நீர் தேங்கி நிற்கும் இடம் ஏற்றதல்ல.

### நிலம் தயாரித்தல்

நடுகைக்கு தேர்வு செய்த நிலத்தை நன்கு உழுது 15 அடிக்கு 15 அடி இடைவெளியில் 2 அடி நீள, அகல, ஆழத்தில் குழி தோண்டிக்கொள்ள வேண்டும்.

பின்பு குழியில் ஒரு கூடை எரு மற்றும் மேல்மண் ஆகியவற்றைக் கலந்து. குழிக்குள்இட்டு 15 நாட்கள் ஆறப்போட வேண்டும்.

அதன்பின் ஒட்டு செய்த செடிகளை நடவிற்கு பயன்படுத்த வேண்டும். விதைக் கன்றுகளை தேர்வு செய்தால். விளைசசலை பெற்றுக்கொள்ள நீண்டகாலமாகும்.

ஓர் ஏக்கருக்கு 175 மரங்கள் வரை நடுகை செய்யலாம். இதற்கும் அதிகமான தோடை மரங்களை நடுகை செய்தால் எதிர்காலத்தில் விளைச்சல் குறையும்.

நாற்றின் ஒட்டுப்பகுதி தரைக்கு மேல் அரையடி உயரத்தில் இருப்பது போல், நடவு செய்ய வேண்டும். செடிகள் சாய்ந்து விடாமல் இருக்க நீளமானக் குச்சியை ஊன்றி செடியுடன் இணைத்துக் கட்ட வேண்டும்.

### நட்டவுடன் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

பின்பு குறைந்தது வாரத்தில் 2 தடவைக்கு குறையாமல் நீர் ஊற்றவேண்டும். செடியின் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இயற்கை உரமாக ஓர் ஏக்கருக்கு 1000 கிலோ மாட்டு எரு, 300 கிலோ மண்புழு உரம், 100 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, இவற்றை ஒன்றாகக் கலந்து, ஆண்டுக்கு ஒரு முறை மழைக்காலத்துக்கு முன்பாக மரங்களுக்கு இட வேண்டும்.

ஆட்டு எரு அல்லது கோழி எருவாக இருந்தால் மண்புழு உரம் தேவையில்லை. ஐந்து வயது மரங்களுக்கு 3 அடி இடைவெளியிலும், அதற்கு மேல் வயதுள்ள



மரங்களுக்கு 4 அடி இடைவெளியிலும்.

1 அடி அகலத்தில் வட்டப்பாத்தி எடுத்து மேற்கண்ட கலவையில் ஒவ்வொரு மரத்துக்கும் 10 கிலோ அளவுக்கு இட வேண்டும். ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பாசனத் தண்ணீரோடு 100 லிற்றர் ஜீவாமிர்தக் கரைசலைக் கலந்துவிட வேண்டும்.

மீன் வளர்த்த பண்ணைக்குட்டையில் இருந்து நீரினை பயிருக்கு பயன்படுத்துவதாக இருந்தால் ஜீவாமிர்தக் கரைசல் தேவையில்லை. காரணம். மீன் வளர்த்த நீர் சிறந்த உரமாகும்.

இந்நீரை பயன்படுத்தி வளர்க்கப்படும் அனைத்து பயிர்களும் அடர் பச்சை நிறமாக மாறும்.

### பாதுகாப்பு முறைகள்

செடிகள் வளரும் வரை களை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மரத்தில் இடைஞ்சலாக இருக்கும் கிளைகளை, ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் கவ்வாத்து செய்ய வேண்டும்.

### நூற்புழு தாக்குதல் இருந்தால்

வாரத்தில் 2 தடவை 16 லீட்டர் நீரில் 2 கிலோ அதிக உறைப்பு உள்ள பச்சை மிளகாயை நன்கு அரைத்து அதோடு 2 கிலோ அடுப்பு சாம்பலையும் சேர்த்து நன்றாக கரைத்து வடிகட்டி எடுத்து மரத்திற்கு தெளிக்க வேண்டும்.

இலைச்சுருட்டுப் புழு தாக்குதல் இருந்தால் 16 லீற்றர் தண்ணீரில் வேப்பங்கொட்டைச்சாறு 2 லீற்றர். மற்றும் 1 கிலோ வெள்ளைபூண்டுச்சாறு என்ற விகிதத்தில் கலந்து பயன்படுத்தலாம் நிச்சயம் கட்டுப்படும். தோடை மரத்தினை நோய் தாக்குவது மிகக்குறைவு என்பதும் உண்மை.

செடி நடவு செய்த 4 ஆம் ஆண்டில் பூக்கள் பூத்து, கொஞ்சம் கொஞ்சமாக காய்க்க ஆரம்பிக்கும். 5ஆம் ஆண்டிற்கு பிறகு சீரான விளைச்சல் கிடைக்கும். ஏனைய மரங்கள் போல். இல்லாமல் திரட்சியாக காய்க்க ஆரம்பிக்கும். பார்பதற்கும் அழகாகவும் இருக்கும். தோடை ஜனவரி தொடக்கம் பிப்ரவரி மாதங்களில் பூ பூத்து ஏப்ரல் தொடக்கம் மே மாதங்களில் இடைப்பருவ விளைச்சலும்.

ஜூன் தொடக்கம் ஜூலை மாதங்களில் பூ பூத்து செப்டம்பர் தொடக்கம் நவம்பர் மாதங்களில் முழு விளைச்சலும் கிடைக்கும். தோடை பூக்க ஆரம்பித்த நாட்களில். வாரத்தில் இரண்டு தடவை மட்டும் நீர் பாய்ச்ச வேண்டும். நீர் தேங்கி நிற்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அதிகமாக நீர் பயன்பாடு இருந்தால் பூ, பிஞ்சு உதிர வாய்ப்புள்ளது. தோடை பூக்கும் தருணத்தில் புதிதாகப் பாத்தி அமைப்பதையும் தவிர்க்க வேண்டும். ஒரு ஹெக்டேயருக்கு 25 தொடக்கம் 30 டன் பழங்கள் வரை கிடைக்கும். சந்தை வாய்ப்பினை பற்றியும் கவலைப்பட தேவையில்லை.

இயற்கையாக உற்பத்தி செய்கின்ற பழங்களுக்கு சந்தையில் எப்போதும் கேள்வி உள்ளது.

மேலதிக ஆலோசனை தேவையெனில் தொலைபேசி ஊடாக எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

**Ph: 0770239784**
**Whatsapp:0769196445**





- யதுகுலா ரஜிதன் -
(ஆராய்ச்சி உதவியாளர்),
பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், கிளிநொச்சி.

# ஊட்டச்சத்து நிறைந்த உணவாக மைக்ரோ கிறீன்

மைக்ரோ கிறீன் என்றால் என்ன? முளைகட்டிய வித்துக்களின் அடுத்த நிலை. விதைகள் முளைகட்டி 7 தொடக்கம் 14 நாட்களில் உணவுக்கு பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ள இரண்டு இலை களுடன் கூடிய நுண்ணிய கீரை ஆகும். இளம் நாற்றுகள் காய்கறிகள் மற்றும் மூலிகைகள் உள்ளடக்கியதாகும். மைக் ரோகிறீன்கள் சமீபத்திய வளர்ந்து வரும் உணவுப் பொருட்களாகும். உணவு மற றும் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கான புதிய அணுகுமுறையாகும்.

நமது அன்றாட வாழ்வில் துளசி, முட்டைக்கோவா, கடுகு, புதினா, கோவா கரட், முள்ளங்கி, மல்லி, வெந்தயம், அவரை இனங்கள், பெருஞ்சீரகம் போன் றவற்றை நுண்ணிய கீரையாக வளர்த்து உணவில் எடுத்துக்கொள்ள முடியும். இவற்றை உணவில் சேர்த்துக் கொள்வ தன் மூலம் குறிப்பிட்ட அளவு ஆரோக்கி யத்தை ஏற்படுத்துவதோடு, நோயைத் தடுக்கும் பண்புகளைக் கொண்டுள்ளது. அவை அதிகளவான நுண்ணூட்டச்சத்து மதிப்பைக் கொண்டுள்ளன.

இதற்கு எந்தவிதமான ரசாயனங்களும் பூச்சி நாசினிகளும் தெளிக்கவும், ரசாயன உள்ளீடுகள் இடவும் வேண்டிய தேவை யில்லை, என்பதால் இது இயற்கையாக உண்ணக்கூடிய உணவாகும். இதில் அதிக அளவில் விட்டமின்கள் மற்றும் ஆன்டிஆக்சிடென்ட் கனியுப்புக்கள் காணப் படும். முளைகட்டிய வித்துக்களிலும் பார்க்க நான்கு ஐந்து மடங்கு போஷனை நிறைந் ததாக காணப்படுகிறது. இதற்கு நாங்கள் எல்லா விதமான விதைகளையும் முளை கட்டி பயன்படுத்த முடியும்.

சமைத்த உணவாக உள்ளெடுக்கும் போது இதில் அடங்கியுள்ள போசாக்குகள் இழக்கப்படும். ஆகையால் இவற்றை வேறு சமைத்த உணவுகளுடன் சேர்த்து அல்லது சலாட் (Salad) போன்ற உணவுகள் மூலம் பச்சையாகவும் எடுத்துக் கொள்ள முடியும். குழந்தைகள் வயது வந்தவர்கள் வயது முதிர்ந்தோர் எல்லோருக்கும் ஏற்ற உண வாகும்.

வீடுகளில் இலகுவாக இதனை வளர்க்க முடியும். இதற்கு நிறைய இடம் தேவைப் படுவதில்லை. ஒரு சிறிய அளவு இடத்தில்



மேற்கொள்ள முடியும். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் நீர் தெளிக்க வேண்டும். எல்லா விதைகளை யும் வருடம் பூராகவும் வளர்க்க முடியாது சில இனங்கள் சில காலங்களில் மட்டும் வளர்க்க முடியும். உதாரணமாக கேரட் போன்ற பயிர்களுக்கு குளிர்மையான காலநிலை தேவை. குளிர் நாடுகளில் வீடு களுக்குள் செய்கை மேற்கொள்ளப்படுகி றது. இதற்கு செயற்கையாக ஒளி வழங்கப் பட்டு ஹைட்ரோபோனிக் முறையில் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இலங் கையிலும் எப்பாகத்திலும் இதனை மேற் கொள்ள முடியும். இடப்பற்றாக்குறையான இடங்களிலும் ஹைட்ரோபோனிக் முறை யில் மேற்கொள்ள முடியும்.

### வளர்ப்பவர்களுக்கான அனுகூலம்

* மிகக்குறைந்த அளவு இடம் போதுமானது.
* குறைந்த காலங்களில் வளர்க்க முடியும்.
* சந்தையில் கேள்வி அதிகம் இலகுவான முகாமைத்துவம்.
* மண், பீடை கொல்லி, மற்றும் இரசாயன உள்ளீடுகள் தேவை இல்லை.

மைக்ரோ கிறீன்கள் வணிக ரீதியாகவும் மேற்கொள்ளப்படுகிறது. உலக நாடுகளில் வணிக ரீதியான உற்பத்தியின் போது ஹைட்ரோபோனிக்ஸ் முறையை பயன் படுத்தி மைக்ரோ கிறீன் உற்பத்தி செய்யப் படுகிறது. உலகளாவிய ரீதியில் மைக்ரோ கிறீன் உற்பத்தியாளர்கள் Farmbox Greens> AeroFarms, Chef's Garden, Good Leaf Farms, Living Earth Farms. இலங்கையில் Earthbar, SHELFLIFE ஆகிய நிறுவனங்கள் மைக்ரோ கிறீன் உற்பத்தியை மேற்கொள் கின்றன.

### உடல் ஆரோக்கியத்துக்கு கிடைக்கக்கூடிய நன்மைகள்

* குழந்தைகள் முதல் வயது வந்தவர்கள் வரை உணவாக எடுத்துக் கொள்வதன் மூலம் அனேகமான நுண்ணூட்ட சத்துக் களையும் பெற்றுக் கொள்ளமுடியும்.
* ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள் ளதால், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது.
* நார்ச்சத்துக்கள், பொட்டாசியம் , இரும்பு, நாகம், மெக்னீசியம் போன்ற நுண்ணூட்ட சத்துக்கள் அடங்கியுள்ளன ஆகையால் உடல் எடையை குறைக்கும் நபர் பயன்படுத்த முடியும்.
* முழுமையாக வளர்ச்சி அடைந்த கீரையை விட 5 மடங்கு அதிகமாக போஷ னை காணப்படுகிறது.
* பாலிபினால் உள்ளடக்கம் அதிகமாக உள்ளது.
* இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த, சில இதய நோய் ஆபத்து காரணிகள் புற்று நோயின் அபாயத்தை குறைக்க உதவும்.
* ஆக்ஸிஜனேற்ற நிறைந்த உணவு, அதிக அளவு பாலிபினால் கொண்டிருப்ப தால் பல்வேறு வகையான புற்றுநோய்க ளின் அபாயத்தை குறைக்க உதவுகிறது.
* நமது ஆரோக்கியம் மற்றும் நாள் பட்ட நோய் அபாயத்தைக் குறைக்கிறது.



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர்

# இளம் கால்நடைகளின் இறப்பினால் தோல்வியடையும் பண்ணைகள்

இன்றைய கன்று நாளைய பசு. பிறக்கும் கன்றுகள் எல்லாம் வெற்றிகரமாக பசுக்களாக மாறும் பொழுது தான் கறவை மாட்டுப் பண்ணையின் உற்பத்தி மேம்படும். கன்றுகள் இளம் வயதில் இறந்தால் பசுக்களாக காளைகளாக மாற்றமடையாது. அவற்றின் மூலம் கிடைக்கும் பால் மற்றும் இறைச்சி போன்ற உற்பத்திகள் கிடைக்காது. ஆடுகள் மற்றும் ஏனைய கால்நடைகளுக்கும் இது பொருந்தும். பண்ணைகளை நடத்தும் பலருக்கு இது புரிவதில்லை. வயதான கால்நடைகள் இறக்கும் போது காட்டும் பிரதிபலிப்பை இளம் கால்நடைகள் இறக்கும் போது காட்டுவதில்லை. அவர்களுக்கு இளம் கால்நடைகளின் இழப்பு எதிர்கால பொருளாதாரத்தில் கடுமையாக பாதிப்பினை ஏற்படுத்தும் என்பது விளங்குவதில்லை சிறிய உயிரினங்கள் தானே இறக்



கின்றன என்ற மனநிலையில் அவற்றை கடந்து போகிறார்கள்.

இயற்கையாக ஒரு பண்ணையில் பிறந்து வளர்ந்து உருவாகின்ற கால்நடைகளை விட வயதான கால்நடைகளை வெளியில் இருந்து வாங்கும் பொழுது செலவு அதிகரிக்கிறது. அந்தந்த சூழல் சுவாத்தியங்களுக்கு ஏற்ப அந்தக் கால்நடைகள் இருப்பதில்லை. புதிய இடங்களில் உற்பத்திகள் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது. உண்ணிக் காய்ச்சல் போன்ற நோய்களால் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன . மருத்துவ செலவுகளும் அதிகரிக்கும். தேறிய இலாபம் குறைவடையும். ஒரு நாட்டில் சிசு மரண வீதம் அதிக அளவில் காணப்பட்டால் அபிவிருத்தியில் அந்த நாடு பின் தங்கியதாகவே கருதப்படும். குறிப்பாக சொன்னால், சுகாதாரத் துறையில் அந்த நாடு பின்தங்கி காணப்படுகிறது என்று அர்த்தம் . அதே போல் ஒரு பண்ணையில் இளம் கன்றுகள் அல்லது இளம் குட்டிகளின் இறப்பு வீதம் அதிகரித்து காணப்படும் பொழுது அந்தப் பண்ணையும் ஒரு தோல்வியுற்ற பன்னையாகவே கருதப்படும் .அந்தப் பண்ணையின் முகாமைத்துவ செயற்பாடுகள் தவறாக இருப்பதாகவே கருத முடியும். சரி இன்றைய தலைப்புக்குள் போவோம்.

**கதை 1-**

அந்தப் பண்ணை மன்னார், மடு இரணை இலுப்பைக் குளத்தில் அமைந்துள்ளது. உரிமையாளரை எல்லோரும் பண்ணையார் என்றே அழைப்பார்கள். நூறு வரையான கறவை மாடுகளை வைத்திருந்தார். நீண்ட காலம் மாடு வளர்ப்பு அனுபவத்தை கொண்டவர். வழமைக்கு மாறாக ஒரு வருடத்தில் முப்பது வரையான கன்றுகள் குடற்புழுத் தாக்கத்தால் நோய்பட்டு இறந்தன. குறிப்பாக இளம் கன்றுகளில் பல கழிந்தன. பலவீனமாகி விழுந்து இறந்தன. ஆரம்பத்தில் பாரம்பரிய சிகிச்சையையும் பிறகு வவுனியாவில் உள்ள விலங்கு உணவுக் கடைகளில் கழிச்சலுக்கு மருந்துகளை வாங்கியும் முயற்சி செய்து பார்த்திருக்கிறார். இறப்பு எண்ணிகை அதிகரிக்க கால்நடை வைத்திய உதவி பெற என்னிடம் வந்திருந்தார். அவரின் பண்ணையை பார்க்கச் சென்ற போது இன்னும் சில கன்றுகள் இறக்கும் தருவாயில் காணப்பட்டன. அன்றைய நாளில் வடக்கு கிழக்கில் கடுமையாக கோரத் தாண்டவம் ஆடிய பரம்பிஸ்டோம் எனும் தட்டைப் புழுத் தாக்கத்தில் அந்த



பண்ணையும் தப்பியிருக்க வில்லை. இளம் கால்நடைகள் மட்டுமல்ல ஓரளவு வளர்ந்த மாடுகளும் பாதிக்கப்பட்டிருந்தன. அத்துடன் மாடுகளின் எருவை யாழ்ப்பாணத்து எரு வியாபாரிகளுக்கு அவர் விற்கின்ற காரணத்தால் மாட்டுக் கொட்டகைகளில் அப்படியே விட்டிருந்தார். அதற்குள்தான் இளம் கன்றுகளும் இருந்தன. குளக்கரைகளில் மேயும் அவரது முதிர்ந்த கால்நடைகளின் காரணமாக தொற்றிய தட்டைப் புழுக்கள் சாணத்தின் மூலம் பட்டியை விட்டு வெளி வராத இளம் கால் நடைகளுக்கும் பரவி அவற்றின் உயிரை குடிக்கத் தொடங்கியிருந்தன. அங்கு நின்ற கன்றுகள் மெலிந்து பானை வயிறுடன் இருந்தன. நோயின் கடுமையையும் எதிர்கால பாதிப் பையும் உரிமையாளரிடம் விளக்கினேன். குடற்புழு நீக்க மருந்துகளையும் கழிச்சல் மருந்துகளையும் கொட்டகையின் சுகாதார மேம்பாட்டையும் முகாமைத்துவ மாற்றத்தையும் செய்ய படிப்படியாக அவற்றின் இறப்பு வீதம் குறைந்தது.

**இரண்டாவது கதை-**

இது வவுனியா செக்கட்டிப் புலவு பகு



தியில் உள்ள ஒரு ஆட்டுப் பண்ணை பற்றியது. நூறு வரையான உள்ளூர்-யமுனபாரி கலப்பு ஆடுகளை அந்தப் பண்ணை கொண்டிருந்தது. அங்கு ஒவ்வொரு வருட தொடக்கத்திலும் பல ஆட்டுக் குட்டிகளின் இறப்பு ஏற்படுவதாக உரிமையாளர் வந்திருந்தார். குட்டிகளுக்கு பால் குறைவு காரணமாகவும் கடும் சளி காரணமாகவும் கழிச்சல் நோய் காரணமாகவும் அவை அதிகளவில் இறப்பதாக சொல்லியிருந்தார். பண்ணைக் கள ஆய்வில் இறப்புக்குரிய காரணிகளை கண்டறிய முடிந்தது. அவரின் ஆட்டுக் கொட்டகை உயர்த்தப் பட்ட அமைப்பு என்ற போதும் சுற்றிவர திறந்த வகையானது. மழை மற்றும் குளிர் நிலை ஆடுகளை நேரடியாக பாதிக்கும் நிலையே அங்கு இருந்தது. இதனால் இலகுவில் குட்டிகள் பாதிக்கப் பட்டு சுவாச நோய்கள் ஏற்பட்டு நியுமோனியா நிலைக்கு மாறி இறந்திருகின்றன. அங்கு இருந்த பல குட்டிகள் மூக்கில் சளியுடனும் கழிச்சல் நிலையுடனும் இருந்தன. கடும் குடல் புழு நிலையையும் அவதானிக்க முடிந்தது. அந்த கொட்டகையின் கொள்ளளவை விட அதிக அளவில் அங்கு கால் நடைகள் இருந்ததால் குட்டிகள் கடும் அயர்ச்சிக்கு உள்ளாகி நோய்த் தொற்றுக் கும் ஆளாகியிருந்தன.

மேலும், அதிகளவான ஆடுகள் இரண்டு குட்டிகளை ஈனும் வகையின. எனினும் உணவு பற்றாகுறை காரணமாக இரண்டு குட்டிகளுக்கும் பாலூட்டும் நிலை அவற்றுக்கு இருக்கவில்லை. இதனால் எப்போதும் ஒரு குட்டிக்கு பசுப் பாலையே கொடுக்கும் நிலை இருந்தது. இதனால் பல குட்டிகள் மெலிந்தும் அடிக்கடி கழிந்து கொண்டும் இருந்தன. கணிசமான இழப்புக்கு இதுவும் காரணம். குட்டிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் கடும்புப் பாலை பல குட்டிகள் முறையாக பெற்றிருக்கவில்லை. இதனால் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து முன்னர் கூறிய கழிச்சல், சுவாச நோய்களுக்கு உள்ளாகி இறந்திருகின்றன. அத்துடன். தட்டைப் புழுக்கள் ஏனைய குடற்புழுக்களின் தாக்கத்துக்கும் இலகுவில் உள்ளாகி இறந்திருகின்றன. இந்தப் பண்ணையின் முகாமைத்துவ மாற்றங்களையும் குறிப்பாக மழை காலம் மற்றும் குளிர் காலத்தில் பண்ணையை சுற்றி உரப் பைகளை சாக்குகளை கட்டி விடச் சொன்னேன். வெயில் வெக்கை காலத்தில் திறக்கச் சொன்னேன். பண்ணையின் சனத்தொகையை குறைக்கவும் பரிந்துரைத்தேன். குட்டிகளை பெரும்பாலும் மேச்சலுக்கு அனுப்பாமல் தனித்து பராமரிக்க சொன்னேன். கிரமமான குடற்புழு நீக்க மருந்துகளை, தடுப்பூசிகளை பரிந்துரைத்தேன். அவற்றுக்குரிய முறையான கால இடை வெளியையும் சொன்னேன். கடும்புப் பால் சரியான காலத்தில் கொடுப்பது பற்றியும் பால் குறைந்த ஆடுகளுக்கு பசுப்பாலை அப்படியே கொடுக்காமல் சுட வைத்து தண்ணீர் கலந்தும் கொடுக்கும்படி அறிவுறுத்தினேன். சுய மருத்துவம் பார்க்காமல் உடனடி கால்நடை வைத்திய ஆலோசனையை பெறும்படியும் சொன்னேன். குட்டிகளின் இறப்பின் பொருளாதார நட்டத்தை உரிமையாளருடன் புள்ளி விபரங்களுடன் சொல்ல அவர் பயந்து விட்டார். அவரின் உடனடி நடவடிக்கையால் அடுத்தடுத்த வருடங்களில் குட்டிகளின் இறப்பு குறைந்தது.

மேற்படி இரண்டு கதைகளிலும், உரிமையாளர்களின் முறையற்ற மேலாண்மை உத்திகளால் அநியாயமாக கன்றுகளை குட்டிகளை இழந்திருந்தனர். அடுத்தடுத்த வருடங்களில் பண்ணைக்கு தேவையான முதிர்ந்த கால் நடைகளை வெளியில் இருந்தே அவர்கள் கொள்வனவு செய்ய வேண்டி இருந்தது. அது வீண் செலவையே தந்திருந்தது. மேலும் எமது பகுதிகளில் வருடம் தோறும் தொடர்ச்சியாக மாடுகள் கன்றை ஈனுவதில்லை. எப்படியும் பிந்தும். இந்த நிலையில் பிறக்கும் கன்றுகளையும் காவு கொடுத்தல் எந்த வித நியாயம்.? இங்கு நான் சொல்ல விரும்புவது, இளம் கால்நடைகளுக்கு பிறந்தவுடன் கடும்புப் பாலை கொடுங்கள். பால் குடிக்காத கால் நடைகளுக்கு மாற்று ஏற்பாடு செய்யுங்கள். விசேட கவனம் செலுத்துங்கள். கொட்டகை சுகாதாரத்தை, முகாமையை முறையாக செய்யுங்கள். தேவையற்ற நெரிசலை குறையுங்கள். இளம் காலண்டைகளை மேய்ச்சலுக்கு அனுப்பாமல் பராமரியுங்கள். கழிவுகளை உடனுக்குடன் அகற்றுங்கள். குடற்புழு மருந்துகளை சரியான அளவில் சரியான நேரத்தில் வழங்குங்கள். தடுப்பூசிகளை செலுத்துங்கள். முக்கியமாக சுய மருத்துவத்தை தவிருங்கள். பண்ணைக் கடைகளில் நேரடியாக மருந்துகளை வாங்காமல் கால்நடை வைத்திய பரிந்துரைக்கு வாங்கி வழங்குங்கள். இவற்றையெல்லாம் செய்துவிட்டு பாருங்கள் உங்களுக்கு புரியும். பிறக்கும் சகல கால்நடைகளையும் முதிர் நிலைக்கு கொண்டு வந்து உற்பத்திகளை எடுத்துப் பாருங்கள் உங்கள் பண்ணைகள் வெற்றிகரமாகவே இருக்கும்.



வேதநாயகம் தபேந்திரன்



# ஓய்வும் உழைப்பும்...

எமது நாட்டில் அரச சேவையில் இருப்பவர்கள் 20 வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்தால் 55 வயதுடன் ஓய்வு பெறலாம். ஓய்வூதியப் பணமும் கிடைக்கும்.

அதிகரித்த வாழ்க்கைச் செலவு காரணமாக 55 வயதுடன் ஓய்வு பெற்று விட்டு மேலதிக வருமானம் உழைப்பதற்குரிய வழியைத் தேடும் பலரைக் காணுகின்றோம்.

சொந்தமாக நிலவளம் உள்ளோர் மேலதிக வருவாய் பெறுவதற்கு விவசாயம் சிறந்ததோர் வழி. விவசாயத்துறை தொடர்பான முன் அனுபவம் உள்ளவர்கள் வருவாய் ஈட்டலாம்.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறு கைத்தொழில் என 3 துறைகளில் ஒரே நேரத்தில் கால் பதிப்பதன் மூலமாக மேலதிக வருவாயைத் தேடலாம்.

விவசாயம் செய்யும் போது ஒரே பயிர்ச் செய்கையில் மட்டும் ஈடுபடக் கூடாது. பயிர் அழிவு அல்லது உற்பத்திப் பொருள்களின் விலைச் சரிவு, சந்தை வாய்ப்புக் கிடைக்காமை போன்ற காரணங்களால் பெருநட்டம் மீளமுடியாத பெரும் அழிவை ஏற்படுத்தி விடும்.

பல பயிர்களில் ஈடுபட்டால் ஒன்றின் இழப்பை இன்னொன்று ஈடு செய்து விடும். சொந்தமாகவோ அல்லது நீண்ட பல வருடக் குத்தகைக்கோ வளமான மண் உள்ள தோட்டம் ஒன்று இருந்தால் பின்வரும் வகைகளில் பயிர் செய்யலாம்.

### கீரை

கீரை 20 முதல் 30 நாள்கள் வரையில் முளைத்து வளர்ந்து பயன் தரும் பயிர். தற்போது 120 ரூபா முதல் 150 ரூபா வரையில் ஒரு பிடி கீரை விலைப்படுகின்றது. வருடம் முழுவதும் மதிப்பு உள்ள உணவுப் பொருளாகக் கீரை உள்ளது.

ஆறு காணியைத் தூசு எருப் போட்டு உழுது கொள்ளுங்கள். முதலில் ஒரு பரப்புக் காணியில் கீரை விதைகளை இடுங்கள். நன்கு நீர் பாய்ச்சி அதனைப் பராமரியுங்கள். கீரை விதைகள் முளைத்து வளரத் தொடங்கும்.

இந்த விதைப்புத் தொடங்கி 6 ஆம் நாள் அடுத்த ஒரு பரப்புக் காணியில் கீரை விதைகளை இட்டு முறையாக நீர் பாய்ச்சுங்கள்.

அடுத்த 6 ஆம் நாளில் அடுத்த ஒரு பரப்புக் காணியில் கீரைகளை விதையுங்கள். பராமரியுங்கள்.

இதே போல அடுத்த 6 ஆம் நாளில் எஞ்சிய ஒரு பரப்புக் காணியில் கீரை விதைகளை விதையுங்கள். நன்கு நீர் பாய்ச்சுங்கள்.

இப்படியே அடுத்தடுத்த ஒரு பரப்புக் காணிகளில கீரைக் கொட்டைகளை விதையுங்கள்.

முதலில் விதைத்த கீரைப் பாத்தியில் 20 ஆம் நாள் முதலாக நன்கு வளர்ந்த கீரைகளைப் பிடுங்கி பிடியாகக் கட்டிக் கொண்டு சந்தைக்கு எடுத்துச் செல்லுங்கள். அல்லது ஊரிலுள்ள பல கடைகளுக்கு வாடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். விற்பனை செய்து கொள்ளுங்கள்.



அதிகாலையில் பிடுங்கி எடுக்கும் கீரையைத்தான் வாங்குவார்கள். அதனால் முதல் நாள் மாலையில் பிடுங்குவதைத் தவிர்க்கவும்.

முதலில் விதைத்த கீரைப் பாத்தியில் கீரைகளைப் பிடுங்கி முடிய அடுத்த பாத்தியிலுள்ள கீரைகள் விற்பனைக்குத் தயாராகி விடும். இப்படியே தொடர்ச்சியாக கீரைகளைப் பிடுங்கி விற்பனை செய்து கொள்ளலாம்.

முதலில் கீரைக் கொட்டைகளை விதைத்த பாத்தியைக் கீரை பிடுங்கிய உடன் ஒரு வாரத்துக்குத் தறையை ஆற விடுங்கள். பின்னர் அதனை உழுது அல்லது மண் வெட்டியால் கொத்தித் தூசு எரு இட்டுக் கீரைக் கொட்டைகளை விதையுங்கள்.

இப்படியே தொடர்ச்சியான ஒரு சுற்றோட்டத்தின் மூலமாகக் கீரை விற்பனையை நாளாந்தம் மேற் கொள்ளலாம்.

கீரைப் பிடிகளுக்குக் கிடைக்கும் அதிகரித்த கேள்விக்கேற்ப உற்பத்தி செய்யும் நிலப்பரப்பை அதிகரிக்கலாம்.

எஞ்சிய காணியைப் பல பயிர்களுக்குப் பங்கீடு செய்து கொள்ளுங்கள்.

வெங்காயம் 50 நாள் முதல் 60 நாள்கள் வரையான காலத்தில் பயன்தரும் பயிர். சில பரப்புக் காணியில் வெங்காயத்தைச் செய்கை செய்யுங்கள். வெண்டி ஒன்றரை மாதத்தில் பயன் தரும். மரவள்ளி எட்டு முதல் ஒன்பது மாதங்களில் ஒரேயடியாகப் பலன் தரும் சீட்டுப் பயிர்.

பச்சை மிளகாய்ப் பயிர்ச் செய்கை பல வழிகளில் பயன் தரும் பயிர். மிளகாய் கன்று நட்ட பாத்தியில் கீரை விதைத்துப் பயன் எடுக்கலாம். வாய்க்கால் புருவத்தில் வெங்காயம் நடலாம். தோட்டத்தின் ஓரத்தில் பூசணி,பயிற்றை, வெண்டி நடலாம். ஒரு பயிருக்கு இறைக்கும் போது பல பயிர்களுக்கு நீர் சுவறும்.

கிழுவைத் தடியை நட்டு அதன் நிழலில் வெற்றிலைக் கன்று நடலாம். தினந்தோறும் ஓரிரு கடைகளுக்கு வாடிக்கை எடுத்து வெற்றிலை விற்கலாம்.

மஞ்சள் மரக் கன்றுகளை நட்டால் எட்டு மாதத்திற்குப் பின்பாக மஞ்சள் செடியின் கீழாகக் கொத்துக் கொத்தாக விளைந்து இருக்கும். இள வெய்யிலில் காய வைத்து பக்குவமாகத் தோல் நீக்கிய பின் விற்றுக் கொள்ளலாம்.

தோட்டத்தின் விவசாயக் கழிவுகளை வளவில் சேரும் இலை குழை கழிவுகளை உணவாக இட்டு ஆடு,மாடு வளர்க்கலாம்.

கோழி வளர்ப்பதாயின் தோட்டப் பக்கமாக கோழிகளை விடக் கூடாது. வீட்டு வளவில் அல்லது கூட்டில் 5 கோழிகளை வளருங்கள். எமது உணவின் மீதத்தை வைத்து ,லகுவாக வளர்க்கலாம்.

சிறுகைத்தொழில்களில் தேங்காய் எண்ணெய் தயாரிப்பு, நின்று கூட்டும் விளக்குமாறு தயாரித்தல் என்பவை குறைந்த முதலீட்டுடன் ஆரம்பித்து வெற்றிகரமாகச் சந்தைப்படுத்தக் கூடிய பொருள்கள் ஆகும்.

கண்ணும் கருத்துமாகப் பல வழிகளில் முயற்சி செய்து உழைத்து வளமாக வாழுங்கள்.வெற்றி உங்களுக்கே. *

# உள்ளம் பொற்கிழி பரிசுப் போட்டிகள் சுயதொழில், புத்தாக்கத்துக்கு பரிசுகள்

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் 60ம் ஆண்டு நிறைவை யொட்டி இளையோரை ஊக்குவிக்கும் முகமாக உள்ளம் சஞ்சிகை கலை, இலக்கிய, சமூக, கலாச்சாரத் துறைகளுக்கான மாபெரும் போட்டிகள் மற்றும் தெரிவுகளை நடாத்தி ரூபா 1.2 மில்லியனுக்கும் அதிகமான, மிகவும் பெறுமதி வாய்ந்த எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட பொற்கிழிப் பரிசுகளை வழங்கவுள்ளது.

புத்தாக்கம் (கண்டுபிடிப்பு)

அமரர்கள் பத்மநாதன் - பேரம்மா தம்பதிகள் ஞாபகார்த்த நினைவுப் பரிசு

வழங்குபவர்கள்:- சுத்தானந்தன் பத்மநாதன், சிவராஜா பத்மநாதன்

1வது பரிசு: 50,000.00

2 வது பரிசு: 25,000.00

3 வது பரிசு: 10,000.00

**போட்டிகளுக்கான விதிகளும், நிபந்தனைகளும்.**

2022 ஆம் ஆண்டின் மிகச் சிறந்த நுகர்வோருக்கான பயன்மிக்க கண்டுபிடிப்பொன்றைத் தொழில் நுட்ப மற்றும் பொறியியல் ஆய்வுகளினூடாக வடிவமைத்த ஆளுமைக்கான விருது இதுவாகும்.

சுய தொழில் - குடிசைக் கைத்தொழில் /கால்நடைப்பண்ணை/ வீட்டுத்தோட்டம்

அமரர் சிவராஜா மதியாபரணம் ஞாப கார்த்த நினைவுப் பரிசு

வழங்குபவர்கள்: அமரரின் குடும்பத்தினர்

1வது பரிசு: 50,000.00

2 வது பரிசு: 25,000.00

3 வது பரிசு: 10,000.00

**போட்டிகளுக்கான விதிகளும், நிபந்தனைகளும்.**

2022 ம் ஆண்டில் கிராமிய மட்டத்திலான தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை உருவாக்குவதில் அயராது பணியாற்றும் தனிநபர்களுக்கான போட்டி இது. தொடர்ச்சித் தன்மை இப் போட்டியில் பிரதானமாகக் கருத்தில் கொள்ளப்படும்.

குடிசைக் கைத்தொழில், கால்நடை மற்றும் வீட்டுத் தோட்டம் என்ற மூன்று துறைகளும் இந்த ஒரே பிரிவினுள் கருத்தில் கொள்ளப்படும்.

உள்ளம் பொற்கிழிப் பரிசுப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி மார்ச் 25 ம் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

1. விண்ணப்பதாரிகள், விண்ணப்ப படிவங்களுடன் அதிகாரிகளின் உறுதிப்படுத்தல் படிவங்கள் எதனையும் அனுப்பத் தேவையில்லை. ஏற்பாட்டாளர்கள் அவற்றை உங்களிடம் கோரும் போது அனுப்பினால் மட்டுமே போதுமானது.
2. போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் https://ullamm.com/2023reg/ என்ற இணைப்பிற்குச் சென்று Google forms மூலமாகவோ அல்லது
3. எமது மின்னஞ்சல் முகவரியான ullamm123@gmail.com மூலமாகவோ
4. அல்லது தபால் மூலமாகவோ
5. அல்லது நேரடியாகவோ கையளிக்கலாம் .

நேரடியாக கையளிக்க அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி கள் பல இங்கே தரப்பட்டுள்ளன.

6.வளர்மதி முன்னேற்றக் கழகம்
சம்பியன் லேன்
கொக்குவில் கிழக்கு
தொ.பே. இல: 0763397297

7. மறுமலர்ச்சி மன்றம்,
காலையடி,
பண்டத்தரிப்பு.
தொ.பே.இல : 0770027621

8.தேசிய கலை இலக்கியப் பேரவை,
இல. 167, குடியிருப்பு வீதி, பூந்தோட்டம்,
வவுனியா.
தொ.பே.இல : 0773755626

9. எண்ணம் போல் வாழ்க்கை
கலை இலக்கிய மன்றம்
22/1,அம்பேக்கர் வீதி,
பாலையூற்று,
திருகோணமலை

10. மகிழ் பதிப்பகம்
754, கனகராசா வீதி,
திருநகர் வடக்கு,
கிளிநொச்சி

11. மகுடம் கலை இலக்கிய வட்டம்
90. பார் வீதி,
மட்டக்களப்பு

12.குயில் தோப்பு கலைச் சங்கம்
600 ககாவத்த,
இரத்தினபுரி.

13. காற்புள்ளி
8 டிக்கோயா வீதி,
அட்டன்.

14.கலையருவி
இல. 202 தலைமன்னார் வீதி,
மன்னார்.
தொ.பே.இல : 0763801841

மேலதிக விபரங்களுக்கு
மின்னஞ்சல் : ullamm123@gmail.com
தொலைபேசி / WhatsApp: 076 - 3397297
முகப்புத்தகம்: https://www.facebook.com/magazineullamm/

# வியாபார சவால்களும் ..........

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலை செய்யும் தளங்களில் தொழிலாளர்கள் மத்தியில் நேர்த்தியான மனோபாவத்தினை உருவாக்குதல். (Positive Attitude).

ஒரே தொழிலில் மட்டும் தங்கியிருக்காது ஒன்றுக்கு மேற்பட்ட வியாபாரத்தில் ஈடுபடுதல். (Portfolio of Business).

வெளிநாட்டு அந்நிய செலாவணி பெறக்கூடிய வியாபாரத் துறையில் ஈடுபடுதல். உதாரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வியாபாரம், நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதி வியாபாரம்.

வரி விலக்களிப்பு செய்யப்பட்ட துறையில் வியாபாரத்தினை விரிவாக்குதல். உதாரணமாக மென்பொருள் ஏற்றுமதி (Software Development, BPO Services, etc.)

"சிறந்த நடப்பு மூலதனம்" (Working Capital Management) முறையினை கடைப்பிடித்தல்.

"முயற்சி திருவினையாக்கும்" என்ற பொன்னான வாக்கியத்திற்கிணங்க விடாமுயற்சியுடன் செயலாற்றி நிர்ணயித்த இலக்கினை அடைவோம். வெற்றி நிச்சயம்.

# சண்முகத்தார் ஒரு சங்கதி கேட்டியளோ..?





## எங்கட ஆச்சி


- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

காரைநகரில எங்கட வாரிவளவுப் பிள்ளையார் கோயிலில தேர்த்திருவிழா சித்திரை வருசப்பிறப்பு அண்டைக்கு நடக்கிறது வழக்கம். வருசப்பிறப்பு எண்டது நல்ல எண்ணங்களோடு இறைசிந்தனையோடு மட்டும் இல்லாமல் ஒற்றுமை உணர் வோடயும் இருக்கும் எண்டால் அந்த வருசம் முழுக்க நல்லா இருக்கும் எண்ட நம்பிக்கையிலதான வருசப்பிறப்பு அண் டைக்கு தேர்த்திருவிழா செய்யிறதெண்டு எங்கடை அப்பு சொல்லுறவர்.உண்மையில தேர்த்திருவிழா எண்டது சிவபெரு மானின்ரை அஞ்சு வேலையளிலை ஒரு வேலையான அழித்த லைக் குறிக்கும் எண்டு சமயபாடப் புத்தகத்திலை விளக்கம் போட்டு இருக்கு. ஆனா எங்கட அப்பு உதுக்கு ஒரு புது விளக்கம் சொல்லுவார்.

எங்கட காசு பணம் படிப்பு பட்டம் பதவி சொத்துப் பத்து இன சனம் சொந்த பந்தம் இருக்கு அதிகாரம் இருக்கு எண்டு வாற அகங்காரம் , ஆணவம், கர்வம், தலைக்கனம் எல்லாம் ஒரு நாளைக்கு அழிஞ்சு போம் . அதுக்கு காரணமாக இருக்கிற எங்கட சம்பாத்தியங்கள் பதவியள் ஆளணி அம்பு சேனை எல்லாம் அது மாதிரியே அழிஞ்சு போம் . ஒண்டும் நிலைக்காது எண்டதை எங்களுக்குச் சொல்லுறது தான் தேர்த்திருவிழா சொல்லுற அழித்தல் எண்டதின்ரை அர்த்தம் எண்டுவார்.

அத மாதிரி தேர் இழுக்க முந்தி அடிக்கிற சிதறு தேங்காயும் உதைத்தான் குறிக்குது எண்டுவார். தேங்காய் ஒடு மாதிரி உன்னைச் சுத்தி கனக்க வைச்சுக் கொண்டு நீ எவ்வளவு பாதுகாப்பாக இறுக்கமா இருக்கிறியோ அது ஒண்டும் நிரந்தரமில்லை. அடிக்கிறவன் வந்தால் அதுகும் அவன் இன்னுஞ் சிலரோட சேர்ந்து வந்தா உன்னைச் சிதறு தேங்காய் மாதிரி அடிச்சு நொருக்கிப் போடு வாங்கள் எண்ட செய்தியை அது சொல்லுது எண்டுவார்.

அது மாதிரி தேர் இழுக்க முந்திக் கற்பூரம் கொழுத்திறதும் ஒரு செய்தியைச் சொல்லும். அது என்னணண்டால் ஒருத்தன் ஆரும் அப்பாவியளுக்கு அநியாயம் செய்வான் எண்டால் அந்தச் சனங்களின்ரை வேதனை குமுறல் கண்ணீர் எல்லாம் இந்தக் கற்பூரம் எரியிற மாதிரி அந்த அநியாயம் செய்தவனையும் அவன்ரை சந்ததியையும் எரிச்சு அழிச்சுப்போடும் எண்டுவார்.

உந்த அழித்தலை விட தேர்த்திருவிழாவிலை இன்னும் கனவிசயங்கள் கிடக்கெண்டுவா ஆச்சி. பாரமான தேரை எப்பிடி ஆக்கள் ஒற்றுமையா ஒண்டா நிண்டு இழுக்கினமோ அதுமாரிச் சனங்கள் ஒற்றுமையா நிண்டா எவ்வளவு பெரிய விசயத்தையும் சாதிக்கலாம் எண்டுவா.அது மாதிரித் தேரை எப்பிடி இழுத்துக்கொண்டு போய் இருப்பிலை விடுகினமோ அது மாதிரி ஒற்றுமையாத் தொடங்கின விசயத்தை முடிவு காணும் வரையும் அதே ஒற்றுமையோட செய்ய வேணும் எண்ட செய்தி அதுக்குள்ளை இருக்குது எண்டுவா.

அது மாதிரி தேரை இழுக்கேக்கை சிலர் தாங்களும் இழுக் கிற மாதிரி கடைசிவரையும் கயித்தைத் தொட்டுக்கொண்டு வந்து போட்டுப் பேந்து தேர் இருப்புக்கு வந்தபிறகு தாங்களுந்தான் இழுத்த னாங்கள். அதால காளாஞ்சி தங்களுக் குந்தர வேணும் எண்டு நிப்பாங்கள். அப்பிடியான ஆக்களை வலு கவனமாக் கவனிக்க வேணும் எண்ட விசயமும் உதுக்குள்ளை இருக்கு எண்டுவா. உது மட்டுமே சிலர் இழுக்கிறவைக்கு ஆ..அப்பிடி இழு...இப்பிடி இழு..வடத்தை அங்கால கொண்டா இஞ்சால கொண்டா எண்டு இழுக்காம நிண்டு உசுப்பேத்திப்போட்டு தேர் கொஞ்சம் இழுபடக்கஸ்ரமா இருக்க இடையில விட்டுப் போட்டு வேற வேலை பாக்க மடத்துக்கு சாப்பிட எண்டு போடுவாங்கள். அப்பிடியான சந்தர்ப்பவாதியள் பற்றிச் சனம் கவனமா இருக்க வேணும் எண்ட செய்தியும் உதுக்கை இருக்குது எண்டுவா.

அதை விட முக்கியமான விசயம் தேரை இழுக்கிறவை தங்கடபாட்டுக்கு கண்டபடி இழுக்க விடப்படாது. ஒரு கட்டுப்பாடு இருக்க வேணும். எவ்வளவு வேகத்தில போகவேணும். எத் தினை பாகையில எந்தத் திசையில திரும்ப வேணும் எண்டு திட்டங்கள் இருக்க வேணும். இல்லாட்டில் பேந்து தேர் இடை யில பிரண்டு போகும் இல்லாட்டில் நிண்டிடும் இல்லாட்டில் இருப்புக்கு போய்ச்சேரச் சரியாக்கஸ்ரப்படும். அதால அதை ஆரெண்டான்ன ஒருத்தர் நெறிப்படுத்த வேணும். எந்த வேலை யிலையிலும் இப்பிடி ஒரு நெறிப்படுத்தல் இருக்க வேணும் எண்டுவார் அப்பு.

அதுக்குத்தான் ஆக்கள் உந்தச்சறுக்காங்கட்டை போடுவினம். சிலர் உதை சறுக்கீசுக்கட்டை, முட்டு எண்டெல்லாஞ் சொல்லு வினம். உந்தச்சறுக்காங்கட்டை எல்லாராலையும் போட ஏலாது. அது கொஞ்சம் சிக்கலான வேலை. சறுக்காங்கட்டை போடுறவரின்ரை கையிலைதான் தேர் இருப்புக்குப் போறது இருக்கிறது. கட்டையைப் பாத்துப் பாத்துப் பக்குவமாய் போட வேணும். தேர் திரும்ப வேணும் எண்டால் முதலே போடத் தொடங்க வேணும். முடக்கு கிட்ட வரப்போடலாம் எண்டு இருந்தால் தேர் சிக்கலில மாட்டுப்பட்டிடும். அது மாதிரி சறுக் காங்கட்டை போடுறவர் தன்னைச் சுத்தி நிக்கிறவை சொல்லு றதைக் கேட்டு அவையோட கதைச்சு ஆலோசிச்சுச் சறுக்காங் கட்டை போடவேணும். தன்ரை இஸ்ரத்துக்கு தான் நெச்ச மாதிரிப் போட்டா தேர் இருப்புக்குப் போய்ச்சேராமல் இடையில நிண்டிடும் எண்டுவார் அப்பு.சனமும் சறுக்காங்கட்டை போடு றவனைப் பேசாம அவன் கட்டைபோட்டுக் குடுக்க குடுக்க வாகாக இழுக்க வேணும் எண்டுவார்.உப்பிடி எங்கட தேர்த் திருவிழாவில எத்தினையோ படிப்பினையள் இருக்குக் கண்டியளோ.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.03.2023இல் வெளியிடப்பெற்றது.